பக்கங்கள் - 12 Registered as a Newspaper in Srilanka விலை 20/=

# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 106 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 24 சனி, 07/06/2014 (TP- 0233238444)

நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்றிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி:- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com

www.putheyavan.com

# தமிழர் தாயகத்தை அபகரிக்கிறது அரசு

## கிளிநொச்சியில் 1,406 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படும்!

(கொழும்பு)
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 406 ஏக்கர் (1,406.94) காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், இவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்ற காணிகளுக்காக காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்றும் அரசு நேற்று நாடாளுமன்றில் அறிவித்தது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, காணி, காணி அபிவிருத்தி அமைச்சரிடம் எழுப்பியிருந்த கேள்விகளுக்கு சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதில்களிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காணிகள் அரசியல்வாதிகளினாலும், அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாகக் கைப்பற்றப்படவில்லை. 2010ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 10 அரச நிறுவனங்களுக்கு 86.08 (11ம்பக்கம்பார்க்க)

## படையினர் அடாத்தாக காணி அபகரித்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்) படையினரால் அடாத்தாக காணிசுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும்
இலங்கை படைகளால் அடாத்தாக காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளமைக்கு எதிராக பொதுமக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினரது காணி சுவீகரிப்பு முயற்சிகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முறைப்பாடுகளை ஏற்க மறுப்பதாக அண்மையில் அச்சுவேலியில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டிருந்தன.
இது தொடர்பில் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கருத்து தெரிவிக்கையில் காணி உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் (11ம்பக்கம்பார்க்க)

## புலிகளுக்கும் அதிக தொடர்பாம் ?

(மட்டக்களப்பு)
அதிகமான காணாமல் போதல் சம்பவங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருப்பதாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடத்தல்கள் காணாமல் போதல் தொடர்பில் விசாரணை நடாத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழு தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமர்வுகளை நடாத்தி வருகின்றது.

அதிகளவான முறைப்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே செய்யப்பட்டுள்ள ( 11ம்பக்கம்பார்க்க)

## தமிழ்நாட்டின் எதிர்ப்புகளாலேயே நரேந்திர மோடி இலங்கை விஜயத்தை தவிர்த்தார்!



(இந்தியா)
தமிழ் நாட்டில் எதிர்ப்புகள் எழும் என்ற காரணத்தாலேயே இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்திய ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடுகள் வலுப்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டால், (11ம்பக்கம்பார்க்க)

## ஐ.நா மனிதஉரிமை பேரவையின் 26 ஆவது அமர்வு ஜீன்-10 ல்

(ஜெனிவா)
ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையின் 26ஆவது அமர்வு எதிர்வரும் 10ஆம் நாள் தொடங்கி 27ஆம் நாள்வரை நடைபெறவுள்ளது.

கடந்த மார்ச்மாதம் சிறீலங்கா தொடர்பில் ஐ.நா மனிதஉரிமை பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி சிறீலங்கா மீது விசாரணை செய்வதற்கான குழு எதிர்வரும் 10ஆம் நாளிற்கு பின்னார் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை மூவர் அடங்கிய குழுவினை நியமிக்கவுள்ளார்.
இந்தகுழு சிறீலங்கா செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது (11ம்பக்கம்பார்க்க)

## இளம் யுவதி துக்கிட்டுத்தற்கொலை

மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ஏ-ஏ-ஜெனிபர் நேற்றுமாலை அவரது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் இவருடைய தாயார் வைத்தியசாலையில் உள்ளதாகவும் அதனால் சம்பவம் நடந்த நேரத்தில் அவரதுவீட்டில் எவரும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது இது தொடர்பாக மன்னார் பொலிசார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்

## அரை மணி நேரத்தில் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் இயந்திரம்

(கொழும்பு)
தேர்தல் ஒன்றின் வாக்கெடுப்பு முடிந்து வாக்கு எண்ணும் பணிகளை ஆரம்பித்து அரை மணிநேரத்திற்குள் தேர்தல் முடிவுகளை அறிவிக்க கூடிய வகையிலான இயந்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.
மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த இயந்திரத்தை பயன்படுத்தி எந்த தேர்தலாக இருந்தாலும் அரை மணி (11ம்பக்கம்பார்க்க)

## இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாட்டில் சந்திரிக்கா



(கொழும்பு)
இந்த மாதம் முதல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையில் தங்கியிருந்து, அரசாங் கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.
சிரேஸ்ட அமைச்சர் ஒருவரின் தகவல்களை மேற்கோள்காட்டி, ஆங்கில இணையத்தளம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது (11ம்பக்கம்பார்க்க)

## மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளார் வடக்கு முதல்வர்.

(கொழும்பு) வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றை மீறி இருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது.
தமது இல்லத்தில் செய்திகளை சேகரிக்கக் கூடாது என்று அண்மையில் முதலமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதன் மூலம் வடமாகாண மக்களின் தகவல் அறியும் (11ம்பக்கம்பார்க்க)

24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்.
www.putheyavan.com
http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.......

# இலங்கையுடன் இரகசிய உடன்படிக்கை இல்லை சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்துடன் இரகசிய உடன்படிக்கைகள் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் இந்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவி தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போது இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள பல உப உடன்படிக்கைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த நிலையில் இது குறித்து ஐக்கிய நாடுகளின் இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர் நேற்றுமுன்தினம் ரைஸிடம் கேள்வி எழுப் பினார்.

இதன்போது தாம் எழுதி வைத்திருந்த பதிலை ரைஸ வாசித்தார். அதில் தம்முடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இலங்கை 2012 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்து விட்டதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து தற்போது இலங்கை அரசாங்கத்துடன் எந்த நிதிக் கொடுப்பனவு உடன்படிக்கைகளும் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார். அத்துடன் பிரதான உடன்படிக்கைகளுக்கு புறம்பாக வேறு உடன்படிக்கைகள் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார்.

# வரும் 10ம் திகதி இலங்கை குறித்த விசாரணைக்குழுவினை நவனீதம்பிள்ளை அறிவிப்பார்

(கொழும்பு)
எதிர்வரும் 10ம் திகதி இலங்கை குறித்த விசாரணைக் குழுவினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை பெயரிட உள்ளார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 10ம் திகதி மனித உரிமைப் பேரவையின் சாதாரண அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளன. அதற்கு முன்னதாக விசாரணைக் குழு நியமிக்கப்பட உள்ளது. இந்த விசாரணைக்குழு ஜெனீவாவில் இருந்து விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கிற்கு சென்று விசாரணை நடாத்த இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்காது என தெரிவிக்கப்படுகிறது. விசாரணைகளில் சாட்சியமளிக்க 21 பேர் ஆயத்தமாகி உள்ளதாகவும், இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ததில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூவர் அடங்கிய விசாரணைக் குழுவொன்றினை நவனீதம்பிள்ளை நியமிப்பார் என குறித்த சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்படுகிறது. எனினும், அண்மையில் 13 பேர் அடங்கிய விசாரணைக் குழுவொன்றினை நியமிக்க உள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகள், பன்றிகள், நரிகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாது - எஸ்.பி.திஸாநாயக்க



(கொழும்பு)
பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே தன்னால் பதிலளிக்க முடியும் எனவும் மாடுகளுக்கு, பைத்தியகாரர்களுக்கு, நரிகளுக்கு, பன்றிகளுக்கு தன்னால் எழுத்து மூலமாக கையெழுத்திட்டு வாக்குறுதிகளை வழங்க போவதில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இணை சுகாதார மாணவர்களின் எழுத்து மூலமான கோரிக்கை தொடர்பில் கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் மாடுகளுக்கும், பைத்தியகாரர்களுக்கும், நரிகளுக்கும், பன்றிகளுக்கும் பதிலளிக்க மாட்டேன். பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே நான் பதிலளிப்பேன். நரிகள் கூறுவதற்கெல்லாம் என்னால் பதிலளிக்க முடியாது.

உயர்நீதிமன்றம் வரை சென்ற இந்த பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட்டதால் அந்த பிரச்சினை 75 வீதம் தீர்க்கப்பட்டு விட்டது. பட்டப்படிப்பு காலம் தொடர்பான தீர்மானத்திற்கு உபவேந்தர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள், மருத்துவ சங்கம் என்பன இணங்கியுள்ளன.

பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ள நிலையில், முன்னிலை சோசலிசக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் தான் இந்த பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. பிரச்சினையை மேலும் இழுபறி நிலைக்கு கொண்டு சென்று தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுக் கொள்வதே அவர்களின் எதிர்பார்ப்பு எனவும் அமைச்சர் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# ரணில் அழைத்திருந்தால் விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு சென்றிருப்பார்

## நிர்மல கொத்தலாவல

(கொழும்பு)
இந்தியாவின் புதிய பிரதமர் பதவியேற்ற வைபவத்திற்கு தன்னுடன் வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருந்தால், வடக்கு மாகாண முதலமைச்சர் அவருடன் சென்றிருப்பார் என அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மாத்தளை - குருணாகல் பிரதான வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்து பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்கள் எதிர்கட்சியாக இருந்து மிகவும் சிரமப்பட்டே ஆட்சியை கைப்பற்றியது.

17 வருடங்களாக அமைப்பு ரீதியான பணிகளை மேற்கொண்டு, மக்களை ஒன்று திரட்டியே அன்று நாங்கள் ஆட்சியை கைப்பற்றினோம். ஆனால், இன்றைய எதிர்க்கட்சி பொறிகளை வைத்து, பேதங்களை ஏற்படுத்தி, பொய் பிரசாரங்களை மேற்கொண்டு ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருகிறது. எமது அயல் நாடான இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி சென்றார்.

இன, பேதம் இல்லை என்பதாலும் சரியான முறையில் நாட்டை ஆட்சி செய்வதாலும் அவற்றை வார்த்தைகளுக்குள் மாத்திரம் வரையறுக்காது செயற்படுவதால், இந்திய பிரதமரின் பதவியேற்பு விழாவுக்கு வருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்த கோரிக்கையை நிராகரித்தார்.

மோடி, எதிர்க்கட்சித் தலைவருக்கு வருமாறு அழைப்பு விடுத்து, எதிர்க்கட்சித் தலைவர், விக்னேஸ்வரனை தன்னுடன் வருமாறு அழைத்திருப்பாரேயானால் விக்னேஸ்வரன் அவருடன் சென்றிருப்பார் எனவும் அமைச்சர் நிர்மல கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார்.

# 15 வயதான காதலியை கடத்திச் சென்ற காதலன் கைது

(புத்தளம்)
15 வயதும் 9 மாதங்களுமான பாடசாலை மாணவியை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த இளைஞர் ஒருவரை கற்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கற்பிட்டி சின்னக்குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை மாணவியே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கொழும்பு 15 புளுமெண்டால் பிரதேசத்தை சேர்ந்த 22 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞருக்கும் மாணவிக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில், மாணவியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இளைஞர் புத்தளம் - பாலாவி சந்திக்கு வரழைத்து அங்கிருந்து கொழும்புக்கு அழைத்துச் சென்றுக்கொண்டிருந்தார். இதனை அறிந்து கொண்ட பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து கொழும்பு நோக்கி சென்ற இருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ள மாணவி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளரா என்பதை அறிய அவர் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எகிப்தியர் ஒருவரை கொலை செய்த இலங்கை பெண் குவைத்தில் கைது

(கொழும்பு)
தற்பாதுகாப்புக்காக எகிப்தியர் ஒருவரை கொலை செய்ததாக கூறப்படும் இலங்கை பெண் ஒருவரை குவைத் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் குவைத்தின் ஹாவாலி என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர் மாடி ஒன்றில் சத்தம் கேட்டதை தொடர்ந்தும் பொதுமக்கள் அங்கு சென்ற போது குறித்த எகிப்தியர் இரத்தம் தோய்ந்த நிலையில் வீழ்ந்து கிடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது ஓடி தப்பிக்க முயற்சித்த இலங்கை பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இதன்போது வாக்குமூலம் அளித்த பெண், குறித்த எகிப்தியர் தம்மை பாலியல் வல்லுறவு செய்ய முயற்சித்தார் என்றும், அதனை தடுக்கவே தாம் தாம் அவரை தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது தற்செயலான சம்பவம் என்று குறித்த இலங்கை பெண் தெரிவித்துள்ளார்.

# பெண்ணொருவரைக் கொலை செய்து விட்டு விஷம் அருந்திய நபர்

(கொழும்பு)
கூரிய ஆயுதம் ஒன்றில் தாக்கி கொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் காலை கம்பளை வைத்திய சாலைக்கு அருகில் ஹெருகொட வீதியில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து மீட்கப் பட்டது. அந்த இடத்தில் விசம் அருந்தி விழுந்து கிடந்த ஆண் ஒருவரையும் பொலி ஸார் மீட்டுள்ளனர்.

அந்த நபர் சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 32 வயதான வெலிமடை பிரதேசத்தை சேர்ந்த பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார்.
தொழில் புரியும் இடத்திற்கு நேற்றிரவு சென்று விட்டு அதிகாலை வீடு திரும்பும் வழியில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

விஷம் அருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர் திவுல, தமண பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர்.
சம்பவம் குறித்து கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையின் தனியார் பேரூந்துகளில் காட்டு யானைக்ளை விரட்டும் ஹோர்ன்கள்!

(கொழும்பு)
சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட அதிக ஹோர்ன் ஒலியை எழுப்பும் வாகனங் களை கண்டறியும் சோதனைகளின் போது 9 தனியார் பேரூந்துகள் அதிக ஒலியை எழுப்பும் ஹோர்னை பொருத்தியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த 9 பேரூந்துகளிலும் சாதாரண டெசிபில் ஒலியை காட்டிலும் காட்டு யானைகளை விரட்டும் ஒலியை ஒத்த ஹோர்ன் பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையினால் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கொழும்பின் அனைத்து பகுதிகளிலும் விசேட கருவிகளை கொண்டு ஹோர்ன் ஒலியை அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகரால் சிறுமி பாலியல் துஸ்பிரயோகம்

(அலுவலகச்செய்தியாளர்)
சிறுவர் இல்லத்தில் வசித்து வரும் பதின்ம வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்த இளைஞர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார் தினம் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவரை எதிர் வரும் 16.06.2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார் இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது

மன்னார் உப்புக்குளத்தில் அமைந்திருக்கின்ற சிறுவர் இல்லத்திலிருந்து குறித்த சிறுமி தையல் பயிற்சி வகுப்புக்காக மன்னார் கச்சேரிப் பகுதிக்கு மாலைநேரம் நடந்து சென்றுள்ளார்
அச்சமயம் மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்திருக்கின்ற பாதணி விற்பனை நிலையத்தில் தொழில் புரிகின்ற இளைஞர் குறித்த சிறுமியை பாதணி வாங்க வருமாறு அழைத்துள்ளார் சிறுமி தன்னிடம் பணமில்லையென கூறியபோது பாதணியை பார்த்து விட்டுச் செல்லுமாறும் பணம் வரும் போது வந்து வாங்கிக் கொள்ளுமாறும் குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார் பின்னர் குறித்த சிறுமியை கடையினுள் அழைத்துச் சென்று அவரது உடலைத் தொட்டு பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார்

இதனைப்பற்றி குறித்த சிறுமி தையல் பயிற்சி ஆசிரியரிடம் தெரிவித்ததை தொடர்ந்து இது சம்பந்தமாக மன்னார் பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது பொலிசார் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர் குறித்த இளைஞர் மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்தவராவார் மன்னார் பொலிசார் மேலதிக விசாரனைகளை மேற் கொண்டு வருகின்றனர்

# அனுமதியின்றி மண் ஏற்றியதுக்கு தண்டம்

(அலுவலகச்செய்தியாளர்)
அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞருக்கு ரூபா ஐம்பதாயிரம் அபராதம் விதிக்கப் பட்டது அபராதத்தை செழுத்தத் தவறின் 2 மாத காலம் சாதரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது முருங்கன் பொலிசாரால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இவ் இளைஞன் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் இதன்போதே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது அத்துடன் வாகனத்தை இரண்டு மில்லியன் ரூபா பிணை முறியில் விடுவித்த நீதவான் ஆனந்தி கனகரட்ணம் வாகனம் தொடர்பான விசாரணைக்கும் உத்தரவிட்டார்

# சிறுவர் துஸ் பிரயோகத்தில் முதியவருக்கு விளக்க மறியல்

(அலுவலகச்செய்தியாளர்)
பத்து வயது சிறுமிக்கு பாலியல் துஸ்பிரயோகம் மேற் கொண்ட சுமார் 60 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒரு வருடத்தின் பின்னர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் இச்சம்பவம் மன்னார் நீதவான் நீதிமன்றில் இடம் பெற்றது

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது பேசாலை எட்டாம் வட்டாரத்தில் வசிக்கும் பத்து வயதுடைய சிறுமியொருவர் கடந்த வருடம் மே மாதமளவில் தனது வீட்டிற்கு அண்மையில் வசிக்கும் உறவினர் ஒருவருடைய வீட்டிற்கு சென்று திரும்பும் மாலை வேளையில் குறித்த சிறுமியை துஸ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் வயோதிபர் தனது வீட்டு வாசலில் நின்றவாறு குறித்தசிறுமியை அழைத்து அருகில் நின்ற வாகன மறைவிற்கு அழைத்து சென்று துஸ்பிரயோகம் செய்ததாக கூறப் படுகிறது

எனினும் சிறுமி பயம் காரணமாகஇது பற்றி யாரிடமும் கூறவில்லை சிறிது காலத்தி பின்னர் பாடசாலையில் படிக்கும் வேறொரு மாணவிக்கு இதனைக் கூறியுள்ளார் அதன் பின்னரே இச்சம்பவம் தொடர்பான தகவல் வெளியாகி சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறையிடப்பட்டுள்ளது


சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் கடந்த 25.05.2014 தலைமன்னார் பொலிசாருக்கு இதுபற்றி முறைப்பாடு செய்யப்பட்டது தலைமன்னார் பொலிசார் கடந்த 29.05.2014 நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்து சந்தேக நபருக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு மன்றை கோரினர் இதற்கிடையில் சந்தேக நபர் தமது சட்டத்தரணிகள் மூலம் மன்றில் சரணடைந்தார் அப்போதே நீதவான் ஆனந்தி கனகரட்ணம் சந்தேக நபரை எதிர்வரும் பதினெட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்

# சித்திவிநாயகர் மாணவன் இங்கிலாந்துக்கு பயணம்




(அலுவலகச்செய்தியாளர்)
இங்கிலாந்தில் நடை பெறவுள்ள 19 வயதுக்கட்பட்ட முரளி நல்லிணக்க அணியில் தேர்வு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழராவார் இவர் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவராகிய புவிராசசிங்கம் ஹரிபவன் ஆவர் இவர் மோட்டைக்கடை நானாட்டானை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்படத்தக்கது.

# மன்னார் மாவட்ட மட்ட பொது அறிவு வினாடி வினாப் போட்டி







(அலுவலகச்செய்தியாளர்)
நானாட்டான் பிரதேச செயலகம் 2014ம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவு வினாடி வினாப்போட்டியை 03.06.2014 செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் நடாத்தியது.

மன்னார் மாவட்டத்தின் அனைத்து முன்னணிப் பாடசாலைகள் உட்பட்ட 21 பாடசாலைகள் இதில் கலந்து கொண்டன. குறிப்பாக பெரியமடு, இலுப்பைக்கடவை, காக்கையன்குளம் ஆகிய பாடசாலைகளும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டன. இப்போட்டியில் இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகி 1ம், 2ம், 3ம் இடங்களை கீழ்வரும் பாடசாலைகள் பெற்றுக் கொண்டன.

**1.மன்/புனித ஆனாள் ம.ம.வி. வங்காலை**

**2.மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை**

**3.மன்/அல்அஸ்ஹர் தேசியப் பாடசாலை**

. இப்போட்டி நிகழ்வின் பிரதம மத்தியஸ்தர்களாக மன்னார் கச்சேரி பிரதம கணக்காளர் மு.கமலேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் .மு.ஸ்ரீபாஸ்கரன், உதவி சமுர்த்தி ஆணையாளர் .மு.சசிரதன் ஆகியோர் கடமை புரிந்தனர். மாலை நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் தனது உரையில் மிகமிக் கஸ்டமான இப்பணியை சிறந்த திட்டமிடலுடன் கனகச்சிதமாக நடத்தி முடித்த நானாட்டான் பிரதேச செயலாளர் க.அ. சந்திரஜயாவும் அவரது குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள் என்று புகழாரம் சூட்டினார்.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் போட்டியில் அதிகூடிய புள்ளி(108) பெற்றுள்ள மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் செல்வன்.ப.பெற்சன் மத்தியூ என்பவருக்கு பணப்பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் S.அருந்தவராஜன் சில்வா என்பவரின் முயற்சியில் வினாக்கள் தயார் செய்யப்பட்டன. இப்போட்டிக்கான நிதியுதவியினை நானாட்டான் பிரதேச மட்ட கிராம அபிவிருத்தி அமைப்புக்களும் வேல்ட்விசன், சேவாலங்கா, மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் ஆகியன வழங்கியிருந்தன.

மாவட்ட செயலகம் உட்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களின் பதவிநிலை அலுவலர்களுடன் நானாட்டான் பிரதேசசெயலக அலுவலர்களின் பூரண ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இப்போட்டியின் ஒருங்கிணைப்பாளரும் நிர்வாக அலுவலருமான S.சூசைநாயகம்.றெவல் நன்றியுரையினை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
புதியவன் PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# காலம் கடந்த ஞானம்

இலங்கையிலே கடந்த அறுபது ஆண்டுகளாக தமிழ் மக்களின் வாழ்வியல் போராட்டம் தமது சுய நிர்ணய இருப்பைதக்கவைத்துக் கொள்வதற்காக பல்வேறு விதமான போரட்டத்தை நடாத்தியவர்கள் அதனால் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் எண்ணற்றவை

ஆனால் எதற்காக இலங்கையில் இனமுரன்பாடு தோற்றம் பெற்றதோ அதற்கான அடிப்படை இதுவரையும் களையப் பட்டதில்லை அதனாலேயே தொடர் தேர்ச்சியான முரன்பாடுகள் நீள் கின்றன பண்டாசெல்வா ஒப்பந்தம் தொடக்கம் ஒஸ்லோ ஒப்பந்தம் வரை பலவிதமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதை எவரும் மறுக்க முடியாது அவையெல்லாம் அர்த்தம் அற்றமற்றுப் போயின காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்களால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டதே வரலாறாகிது இதன் உச்சத்தினால் தான் ஆயுதப் போராட்டம் வீச்சுப் பெற்றது எனவே போராட்ட காலத்து ஒப்பந்தங்களும் வலுவற்றதாகவே போனது இலங்கை அரசாங்கத்திற்கு தமிழர்களின் இனப்பிரச்சனை தீர்வுவிடயத்தில் இதயசுத்தியாக ஒருபோதும் அனுகியதில்லை என்பதே கடந்த காலத்தில் இருந்து நாம் கற்றுக்கொண்ட கசப்பான அனுபவம்

ஆனால் 2009ற்குப்பின் அதாவது புலிகளின் அஸ்தமனத்திற்குப் பின்னர் தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பை தார்மீக ரீதியில் பொறுப் பேற்று வழிநடத்த வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆக்கபூர்வமாக தமிழ் மக்களிற்கு செய்தது என்ன ? புலிகளால் ஒருங்கிணைக்கப்பட்டவர்கள் என்பதனாலே தமிழ் மக்கள் அங்கிகரிக்கின்றார்கள் என்பதை மறந்து விடக்கூடாது ஏனெனில் கடந்தகாலத்தில் தமிழ்த் தேசியத்திற்கு விரோத மாக இராணுவத்தினருடனும் புலனாய்வாளர் களுடனும் இந்திய இராணுவத் தினருடனும் சேர்ந்து எத்தனை தமிழ் இளைஞர் யுவதிகளை கொலை செய்ததும் காண்மல் போகச் செய்ததும் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதும்

கப்பம் வாங்கியதும் மறந்து விடமுடியாது தற்போது கூட்டமைப்பில் இருந்து தமிழ் தேசியம் பற்றிவீராப்புப் பேசுபவர்கள் கடந்த காலத்தில் தங்களது நிலையை மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்

ஆகவே கடந்த ஐந்து ஆண்டுகளில் முறையாக எந்தவித தீர்வுதிட்டத்தையும் முன்வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு பலராலும் முன்வைக் கப்பட்டதுடன் ஊடகங்களும் பலமுறை சுட்டிக்காட்டியது அதவது தமிழ் மக்களின் இன்றைய அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையில் தீர்வுத்திட்டம் தயாரித்து அதைப் பகிரங்கமாக மக்களின் கருத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவே எழுத்தில் பலமுன்மொழிவுகள் உள்ளன அவற்றை அடிப்படையாக கொண்டு சுய ஆட்சித் தத்துவத்தின் அடிப்படையிலான சமஸ்ரி முறையிலான தீர்வே தமிழ் மக்களின் நீண்டகால போராட்டதிதிற்கு தீர்வாகமுடியும் இந்திய விசுவாசத்தில் 13பற்றி பேசுவதோ அல்லது 13ற்கு மேல் விவாதிப்பதோ வேடிக்கையானது அழுத்தம் திருத்தமாக இது தான் தீர்வு என்பதை முன்வைக்க தயங்குவது ஏன் ஒருசில வழிப்போக்கர்களின் கையில் தமிழ் தேசியம் முடங்கிக் கிடக்கிறது இதற்கு மாற்றம் அவசியம் தற்போது சுரேஸ்பிரேமச்சந்திரன் அறிவிப்பு ஆரோக்கிய மானது காலம் கடந்தாலும் இனியாவது தீர்வுத்திட்டத்தை முன்வைப்பார்களா என மக்கள் ஆதங்கப் படுகிறார்கள் தமக்குபள் பதவிப் போட்டியை விட்டுவிட்டு இனவிடுதலைக்காக விசுவாசத்துடன் செயலாற்றுவார்களா ? தமிழ்த் தலைமைகள்

# ஜெயலலிதாவின் கோரிக்கையை ஐதேக நிராகரித்தது குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் - எரான்



(கொழும்பு)
இலங்கை தமிழர் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மத்தியஸ்தத்தில் புலம்பெயர் தமிழர்களையும் உள் ளடக்கி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் கோரியுள்ளமையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிர மரத்ன இந்த நிராகரிப்பை கொழும்பில் செய்தியா ளர்கள் மத்தியில் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் எல்லை சுதந்திரம் என்பவற்றை பாதுகாத்து வருகிறது. இந்தநிலையில் ஜெயலலி தாவின் கோரிக்கையை ஏற்கமுடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் சர்வஜன வாக்கெடுப்பு கொள் கையை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்தாலும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்போது வெளியாரின் தலையீடுகள் தவிர்க்கப் படவேண்டும் என்றும் எ்ரான் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை ஐக்கிய நாடுகளின் போர்க்குற்றம் தொடர் பில் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்கு இன் னமும் இலங்கை அரசாங்கத்துக்கு வாய்ப்புள்ளதாக எரான் தெரிவித்துள்ளார். குற்றவாளிகள் தராதாரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும் - எரான் விக்ரமரட்ன குற்றவாளிகள் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண் டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாதத்தை தூண்டும் வகையில் கருத்து வெளி யிடுகின்றனர், அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான கருத்துக்கள் மூலம் நாட்டுக்கு பாதகம் ஏற்படும். அனைவரும் நாம் இலங்கையர் என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து பேசப்படுகின்றது. சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மாற்றுக் கருத்துக்கிடையாது. குற்ற வாளிகளின் பெயர்கள் குறித்த தகவல்கள் வெளி யிடப்பட வேண்டும். சுங்கத் திணைக்களம் ஊழல் மோசடிகள் நிறைந்த நிறுவனமாகவே மக்களினால் கருதப்படுகின்றது, இதனை மாற்றியமைக்க நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசியல் தலையீடு களை முற்று முழுதாக தடுக்க ஆவன செய்ய வேண்டும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அதிகள வில் செலவிடுவதனால் மட்டும் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. உற்பத்தியை மையமாகக் கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பில்லாத வகையில் பொலிஸ் அதிகாரங்கள் வழங்க அரசு ஆராய்வு

(கொழும்பு)
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத, மாகாண சபைகளின் நிர்வாக முகாமைத்துவதற்கு தேவையான பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசாங்கம் சிந்திப்பதாக அமைச் சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்குவதில்லை என்பதை அரசாங்கம் கொள்கை யளவில் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. எனினும் பெற்றுள்ள சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள தேவைக்கேற்ப மாகாண சபைகளுக்கான அதிகாரங் களை வழங்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தி யாளர் மாநாடு ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 13வது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே கொண்டு வரப்பட்டது. எனினும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும்தான் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. எனினும் பொலிஸ் அதி காரத்தில் நிர்வாகத்துக்கு முகாமைத்துவத்துக்குத் தேவையான குறிப்பாகப் போக்குவரத்து பொலிஸ் பிரிவு உள்ளிட்டவற்றை வழங்குவதற்குரிய விட யங்கள் குறித்து அரசு சிந்தித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு .வரையில் 13வது திருத்தச் சட் டத்தை அமுல்படுத்துவதற்கான தேவை இருக்க வில்லை. யுத்தத்தின் பின் வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பெற்ற சுதந்திரத்தின் பின்னர் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்து வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரம் ஓரளவு கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது. பொலிஸ் ஆணைக் குழு மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. எனி னும் சிலவற்றை வழங்குவது தொடர்பாக அரசு சிந் தித்து வருகின்றது என்றும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்தார்.

# இலங்கையை ஏமாற்றி பூட்டானுக்கே முதல் வெளிநாட்டுப் பயணம்

(கொழும்பு)
இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் வெளிநாட்டுப் பயணத்தில் இலங்கைக்கு முதலிடமில்லை என்பது உறுதியாகியுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த மாதம் தனது முதல் வெளிநாட்டுப் பய ணத்தை பூட்டானுக்கு மேற்கொள்ளவுள்ளார்.

இவரது பயணத்துக்கான ஏற்பாடுகள் மற்றும் தங்கு மிட ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக, இந்திய அதிகாரிகளின் உயர்மட்டக் குழுவொன்று பூட்டானுக்குப் பயணமாகவுள்ளது. தற்போது நடை பெறும் இந்திய நாடாளுமன்ற அமர்வுகள் முடிந்த பின்னர், பெரும்பாலும், இம்மாதம் மூன்றாவது வாரத் தில் இந்தப் பயணம் இடம்பெறலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமது நாட் டிக்கு வருமாறு இலங்கை உட்பட சார்க்க நாடுகள் பதவியேற்பு விழாவின் போது அழைப்பு விடுத்திருந் தன. இந்த நிலையில், மோடியின் முதல் வெளி நாட்டுப் பயணம் இலங்கையாக இருக்கலாம் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தியை வெளியிட்டிருந்தது. எனினும், கடந்த சில நாட்களாக், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணத் திட்டம் குறித்து நடத்தப்பட்ட ஆலொசனை யில், இலங்கை, பாகிஸ்தானுக்கான பயணங்கள் குறித்து கலந்துரையாடப்படவேயில்லை என்று புது டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. பூட்டான், நேபா ளம், பங்களாதேஸ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு செல்வது குறித்தே, கலந்துரையாடப் பட்டுள்ளது.

இறுதியில் முதல் பயணத்தை இந்தியாவின் நெருங் கிய நட்பு நாடான பூட்டானுக்கு மேற்கொள்வது என்று முடிவாகியுள்ளது. இதையடுத்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிறேசிலில் அடுத்த மாத நடுப்பகு தியில் நடக்கவுள்ள பிறிக்ஸ் அமைப்பின் உச்சி மா நாட்டில் பங்கேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளராக ரணிலை ஏற்க முடியாது ஜே.வி.பி

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பா ளராக நிறுத்துவதை எதிர்ப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அவரை பொது வேட்பாளராக நிறுத்தினால் நம்பிக்கை நொறுங்கி விடும் எனவும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரணில் விக்ரமசிங்கவை பொதுவேட்பாளராக ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளாது எனவும் அவர் கூறியுள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம் குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதால், ஜே.வி.பி இன்னும் அது பற்றிய தெளிவான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை. அரசாங்கம் அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமா என்பது பற்றி எமக் கு எதுவும் தெரியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மக்களின் தீர்ப்பு தனக்கு எதிராக திரும்பியுள்ளது என்பதை அறிந்தால், அவர் தேர்தலை நடத்தாது பின்வாங்கி மாற்று வழிக்கு செல்லக் கூடும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறைத்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு அதிகாரத்தை தக்கவைக்க அவர் முயற்சிக்கக் கூடும்.

சுமூகமான தனது அதிகாரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைவிடுவார் என்று நம்பமுடியாது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியில் பேசி அது பற்றிய முடிவை ஜே.வி.பி எடுக்கும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஜே.வி.பி புறக்கணிக்கும் என வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை. அவ்வாறான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார்.

# நவநீதம்பிள்ளையின் விசாரணைக்குழு பயங்கரமான அபாயம் - தயான் ஜயதிலக்க



(கொழும்பு)
ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிரான நியமிக்க உள்ள சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால், அது இலங்கைக்கு பயங்கரமான அபாயமாக இருக்கக் கூடும் என முன்னாள் ராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவர் பதவியை சர்வதேசத்தில் நன்மதிப்பை பெற்ற ஒருவருக்கு வழங்க நவநீதம்பிள்ளை முயற்சித்து வருகிறார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானை அதற்காக தெரிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. கொபி அனான் அதனை நிராகரித்துள்ளார் எனவும் தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டி யுள்ளார்.

இராஜதந்திர ரீதியில் முன்னாள் செயலாளர் நாயகத்திற்கு இருக்கும் வரவேற்பு காரணமாக அவரை தலைவர் பதவிக்கு தெரிவுசெய்ததாக கூறப்படுகிறது. இது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் தந்திரம் என இராஜதந்திரிகள் கோடிட்டுக்காட்டியுள்ளனர். கொபி அனான் போன்ற நோபல் பரிசு பெற்ற ஒருவரை விசாரணைக்குழுவின் தலைவராக நியமித்தால், அவருக்கு வீசா வழங்குவதை இலங்கை அரசாங்கம் நிராகரிக்க முடியாது. அத்துடன் அவர் இலங்கையில் பயணிக்கும் இடங்கள் மற்றும் சந்திக்கும் நபர்கள் தொடர்பில் வரையறைகளை விதிக்க முடியாது. கொபி அனானுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இலங்கைக்கு சார்பான நாடுகளும் இலங்கையை விமர்சிக்க கூடும். 13 பேரை கொண்ட சர்வதேச விசாரணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் சர்வதேச புகழ்பெற்ற தொழில்நுட்ப நிபுணர்கள்.

மேற்படி விசாரணைக்குழுவை நியமிப்பதன் மூலமாக நவநீதம்பிள்ளை இலங்கைக்கும் இலங்கை இராணுவத்திற்கும் பாரிய அழுத்தங்களை கொடுக்க முயற்சித்து வருகிறார் எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார். அதேவேளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் தயாரித்துள்ள மனித உரிமை தொடர்பான இறுதியறிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் போது இலங்கைக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக் கூடும் எனவும் தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்

# தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் தனிச் சிங்களத்தில் கடமையாற்றும் வனபரிபாலன திணைக்களம்

(திருகோணமலை)
திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள திருமலை மாவட்ட வனபரிபாலன திணைக்களம், தமது அனைத்து நடவடிக்கைகளையும் தனிச் சிங்களத்திலே மேற்கொண்டு வருகிறது. இங்கு தமிழ் பேசும் மக்கள் அதிகளவில் வாழும் மேற்படி பிரதேசத்தில், இத்திணைக் களத்தின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இத்திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் அனைத்து கடிதங்களும் தனிச் சிங்களத்தினால் அமைவதால் பொது மக்கள் மொழி விளங்காத நிலையில் அவஸ்தைப்படுகின்றனர். மேலும் அங்கு போடப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகள் கூட தனிச் சிங்களத்தில் காணப்படுவதால் பொதுமக்களுக்கு இதனை விளங்கி தமது கருமங்களை ஆற்ற முடியாதுள்ளது.
எனவே சம்பந்தப்பட்ட திணைக்களம் இது விடயத்தில் கவனமெடுத்து தமிழ் மொழிப் பயன் பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
மும்மொழிக் கொள்கை பயன்பாடு நாடு பூராகவும் அமுல்படுத்தப்படல் வேண்டும் என அரச மொழித் திணைக்கள சுற்றறிக்கை இருந்தும் இந்த அதிகாரிகளின் அசமந்தப் போக்கே இந்த நிலைக்கு காரணமாக உள்ளது. காட்டில் விறகு பெறல், கிரவல் மண் அள்ளுதல் மற்றும் கல் உடைத்தல் ஆகியவற்றிற்கு இந்த திணைக்களமே பொறுப்பாக உள்ளது இவற்றினை பெறுவதற்கு இத்திணைக் களமே அனுமதி வழங்குதல் வேண்டும்.

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான அனுமதியும் உரிய காலத்திற்குள் வழங்காமல் நீண்ட காலத்திற்குப் பின்னரே அனுமதியும் கிடைக்கப் பெறுகிறது. எனவே மேற்படி நிர்வாக குறைபாடுகள் விரைவாகக் கலையப்பட்டு மக்களுக்கான சேவைகள் இலகுவாக நடைபெறல் வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்கின்றனர்.

## இன்று

வைகாசி -24 சனிக்கிழமை 07.06.2014

திதி: நவமி
நட்சத்திரம்: உத்தரம்

சுப நேரம்: 2.52 - 4.22 வரை
இராகு காலம்: 8.52 - 10.22 வரை
எமகண்டம்: 1.22 - 2.52 வரை



## இன்றைய பலன்

07.06.2014

வழங்கியவர் மணிகண்டன்




இன்று நீங்கள் சுற்றுச்சூழ்நிலையின் நிலவரம் உணர்ந்து பேசுவது நல்லது. அடுத்தவரின் தவறான வழிகாட்டுதலை நன்மை என, நம்பி செயல்பட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும்.




இன்று, உங்களின் சோம்பல், தாமத குணத்தால் பெற வேண்டிய முக்கிய ஆதாய பலன் ஒன்றை, தவறவிட நேரலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணவரவை விட புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.




இன்று, உங்கள் மனதில் கூடுதல் நற்சிந்தனையும், உழைப்பின் மீதான நம்பிக்கையும் வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு, எளிதில் பூர்த்தியாகும். பணப்பரிவர்த்தனையில், திருப்திகர முன்னேற்றம் உண்டு. புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.




இன்று, உங்கள் தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வதால் மட்டுமே, செயல்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். வீண் பேச்சு பேசி, நேரம் கடத்துபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சிறக்க, சில சீர்திருத்தம் தேவைப்படும். பணவரவுக்கு ஏற்ப செலவுகளில், சிக்கனம் பின்பற்றுவீர்கள்.




இன்று, திட்டமிட்டு செயல்படுத்துகிற பணிகள் அத்தனையிலும், தகுந்த நன்மை கிடைக்கும். அக்கம் பக்கத்தவரிடம் இருந்த மனக்கிலேசம் விலகும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவீர்கள். ஆதாய பணவரவு உண்டு. அதிக விலையுள்ள பொருள் நண்பரின் சிபாரிசால் சலுகை விலையில் வாங்குவீர்கள்.




இன்று, புதிய அவசரப்பணி உருவாகி அன்றாட பணி நிறைவேற்றுவதில், தாமதம் குறுக்கிடும். தொழில், வியாபார நடைமுறை சீராக, நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அளவான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத அழகு சாதனப்பொருள் பயன்படுத்த வேண்டாம்.




இன்று, இனிய எண்ணங்களால் அதிக மகிழ்ச்சி கொள்வீர்கள். செயல்களில் நியாய, தர்மம் தவறாமல் பின்பற்றி சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். உபரி பண வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.




இன்று, உங்கள் செயல்களில் சமயோசித தன்மை நிறைந்திருக்கும். திகைப்பு தந்த பணியை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கில், புதிய சாதனை ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர் ஒருவருக்கு, படிப்பில் உயர்வு பெற தேவையான உதவி செய்வீர்கள்.




இன்று, நண்பர்களில் ஒருவர் அதிகப்படியாக புகழ்ந்து பேசி, சொந்தக் காரியம் நிறைவேற்ற முயற்சிப்பார். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழிலில் உருவாகிற, மாறுபட்ட சூழ்நிலையை தகுந்த செயலால் சரி செய்வீர்கள். பணவரவு, அத்தியாவசிய செலவுக்கு பயன்படுகிற வகையில் இருக்கும். உணவுப் பொருள் தரம் அறிந்து உண்பது நல்லது.




இன்று, உங்கள் மனதில் எதிர்கால நலன் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனை கிடைத்து, புதிய நம்பிக்கை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் நல்ல வளர்ச்சி பெற, தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு சீராக கிடைப்பதில் இருந்த சிரமம் விலகும். வெளியூர் பயணம், பயன் அறிந்து மேற்கொள்ளவும்.




இன்று, எதிரியால் வருகிற தொந்தரவு பலமிழந்து போகும். உங்கள் மனதில் குழப்பம் விலகி, நிம்மதி பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய மாற்றுத் திட்டம் செயல்படுத்துவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு, திட்டம் நிறைவேற அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




இன்று, இறைவன் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். புதிய திட்டம் ஒன்றை சிறப்பாக செயல்படுத்துவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், கூடுதல் பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவை, உரிய வகையில் முதலீடு செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்களிடம், ஒற்றுமை வளரும்.

## சிந்திக்க சில வரிகள்

பணம் உன்னிடம் இருந்தால்
யாரையும் உனக்குத் தெரியாது.
பணம் உன்னிடம் இல்லை என்றால்
யாருக்கும் உன்னை தெரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## உடல் எடை அதிகரிக்க வேண்டுமா? இதோ நீங்கள் சாப்பிட வேண்டிய பழங்கள்



**வாழைப்பழம்**

வாழைப்பழத்தில் கலோரிகள் அதிக அளவில் இருப்பதால், இவற்றை உடல் எடையை குறைக்க நினைப்போர் சாப்பிடக் கூடாது. ஆனால் உடல் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு இது ஒரு அருமையான பழம்.

**உலர் பழங்கள்**



உலர் பழங்களான உலர் திராட்சை, முந்திரி, பாதாம் போன்றவற்றில் சாச்சுரேட்டட் கொழுப்புக்கள் மற்றும் கலோரிகள் அதிகம் இருக்கிறது. எனவே எடையை அதிகரிக்க நினைப்போர் தினமும் உலர் பழங்களை அதிகம் சாப்பிட்டு வாருங்கள். ஆனால் இவற்றை எடையைக் குறைப்போர் டயட்டில சேர்க்கக்கூடாது.

**மாம்பழம்**




உடல் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு கோடைக் காலம் தான் சிறந்தது. ஏனெனில் பழங்களின் அரசனான மாம்பழமானது கோடையில் விலை மலிவில் அதிகம் கிடைக்கும். இந்த மாம்பழத்திலும் கலோரிகள் எண்ணற்ற அளவில் உள்ளது. எனவே எடையை அதிகரிக்க நினைப்போர் கோடைக்காலத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**சப்போட்டா**



சப்போட்டாவிலும் கலோரிகள் வளமாக உள்ளது. இந்த பழம் பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு பழத்திலும் கலோரிகள் அதிகம் உள்ளதால், இதனை தின மும் சாப்பிட்டு வந்தால், உடல் எடை அதிகரிப்பதைக் காணலாம். ஆனால் இதனை அவ்வப்போது சாப்பிட்டால், எடையில் எவ்வித மாற்றமும் தெரியாது.

**அத்திப்பழம்**



அத்திப்பழத்திலும் கலோரிகள் அதிகம் உள்ளது. அதிலும் ஒரு பழத்தில் 111 கலோ ரிகள் இருக்கும். எனவே எடையை குறைக்க நினைப்போர் இதனை டயட்டில் சேர்க்க வேக்கூடாது. ஆனால் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு, இது ஒரு சூப்பரான பழம்.

**அவகேடோ**




எடையை அதிகரிக்க வேண்டுமானால் அவகேடோவை சாப்பிடுங்கள். ஏனெனில் இவற்றின் ஒரு பெரிய பழத்தில் 322 கலோரிகள் உள்ளது. மேலும் இவற்றில் நல்ல கொழுப்புக்கள் அதிகம் இருப்பதால், இவை இதயத்திற்கு ஆரோக்கியத்தையும் வழங்கும்.

**பேரிச்சம் பழம்**



பேரிச்சம் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால், உடல் எடையானது அதிகரிக்கும். மேலும் 5 பேரிச்சம் பழத்தில் 114 கலோரிகள் நிறைந்துள்ளது.

## சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை



வீடுகளில் இருக்கும் மூலிகைப் பொருட்களில் சுக்கு முதலிடம் பெறுகிறது. சுக்கைத் தயாரிக்கும் பக்குவம் அறுவடை செய்த இஞ்சியை ஒருநாள் முழுதும் நீரில் ஊற வைத்து, மூங்கில் குச்சிகளைக் கொண்டு, இஞ்சியின் மேல் தோலை நீக்கி, பின்னர் ஒருவாரம் சூரிய ஒளியில் நன்கு காயவைத்துக்கிடைப்பதுதான் சுக்கு.

**மருத்துவப் பயன்கள்**

1.சுக்குடன் சிறிது பால் சேர்த்து, மைய்யாக அரைத்து, நன்கு சூடாக்கி, இளஞ் சூடான பதத்திற்கு ஆறினதும், வலியுள்ள கை, கால் மூட்டுகளில் பூசிவர மூட்டு வலி முற்றிலும் குணமாகும்.

2. சுக்கைத் தூள் செய்து, எலுமிச்சை சாறுடன் கலந்து குடித்தால் பித்தம் விலகும்.

3. சுக்கு, மிளகு, தனியா, திப்பிலி, சித்தரத்தை இவ்வைந்தையும் இட்டு க'யம் செய்து பருகிவர, கடுஞ்சளி மூன்றே நாட்களில் குணமாகும்.

4. சிறிது சுக்குடன், ஒரு வெற்றிலையை மென்று தின்றால், வாயுத்தொல்லை நீங்கும்.

5. சுக்கு, வேப்பம்பட்டை போட்டு க'யம் செய்து குடித்துவர, ஆரம்பநிலை வாதம் குணமாகும்.

6. சுக்குடன் சிறிது நீர் தெளித்து, விழுதாக அரைத்து, நெற்றியில் தடவினால் தலைவலி வந்தவழியே போய்விடும்.

7. சுக்கு, கருப்பட்டி, மிளகு சேர்த்து, சுக்கு நீர் காய்ச்சிக் குடித்து வர உடல் அசதி, சோர்வு நீங்கி சுறுசுறுப்பு ஏற்படும்.

8. சுக்குடன், தனியா வைத்து சிறிது நீர் தெளித்து, மைய்யாக அரைத்து உண்டால், அதிக மது அருந்திய போதை தீர்ந்து இயல்பு நிலை ஏற்படும்.

9. சுக்கோடு சிறிது வெந்தயம் சேர்த்துப் பொடியாக்கி, தேனில் கலந்து சாப்பிட்டால், அலர்ஜி தொல்லை அகலும்.

10. சுக்கு, மிளகு, சீரகம், பூண்டு சேர்த்து கஷாயம் செய்து காலை, மாலை குடித்துவர மந்தம் குணமாகும்.

11. சுக்குடன், சிறிது துளசி இலையை மென்று தின்றால், தொடர் வாந்தி, குமட்டல் நிற்கும்.

12. சுக்குடன், மிளகு, சுண்ணாம்பு சேர்த்து மைய்யாக அரைத்துப் பூசிவர, தொண்டைக் கட்டு மாறும். குரல் இயல்பு நிலைபெறும்.

13. சிறிது சுக்குடன், சின்ன வெங்காயத்தை வைத்து அரைத்துச் சாப்பிட்டால், மலக்குடலில் உள்ள தீமை தரும் கிருமிகள் அழியும்.

14. சுக்குடன், கொத்தமல்லி இட்டு க'யம் செய்து பருகினால் மூலநோய் தீரும்.

## சமையலறையில் மறைந்திருக்கும் பெண்ணின் அழகு

அழகுக்கு செயற்கையான வழிகளை மேற்கொள்வதை விட இயற்கை வழிகளே நீடித்து நிற்கும். மேலும் எந்த பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது. அழகின் மேல் அக்கறை கொள்ளும் பெண்கள் அதிகமாக பாதிக்கப் படுவது சரும வறட்சியால் தான்.

இந்த சரும வறட்சியானது குளிர் காலத்தில் மட்டு மின்றி, கோடைக்காலத்திலும் சந்திக்கக் கூடும். கோடையில் உடலில் உள்ள நீர்ச்சத்தின் அளவு குறைவதால், உடல் வறட்சியடைவதுடன், சருமத்தையும் வறட்சி அடையச் செய்கிறது. எனவே அழகை பராமரிக்க அன்றாடம் சருமத் திற்கு மாய்ஸ்சுரைசர் களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

பொதுவாக மாய்ஸ்சுரைசர்களை கடைகளில் அதிக பணம் செலவழித்து தான் வாங்கி பயன்படுத்துவோம். அதிலும் அவைகளில் கெமிக்கல் கலந்திருக்கும். எனவே, உங்கள் சமையலறையிலேயே சில மாய்ஸ் சுரைசர்கள் மறைந்திருக்கின்றன.

**வெள்ளரிக்காய்**

வெள்ளரிக்காயிலும் ஈரப்பதத்தை தக்க வைக்கும் குணம் உள்ளது. எனவே இதனை அரைத்தோ அல் லது துண்டுகளாக்கியோ சருமத்தில் சிறிது நேரம் வைத்து வந்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் பளிச்சென்று அழ காக மின்னும்.

**தேங்காய் எண்ணெய்**

வறட்சியான சருமம் உள்ளவர்கள் தேங்காய் எண்ணெ யை சருமத்திற்கு தடவி மசாஜ் செய்து வந்தால், வறட்சி நீங்குவதுடன், சருமத்தில் உள்ள அழுக்குகள் வெளியேறி, சருமம் பொலிவாக காணப்படும்.

## வெண்டைக்காய் சாப்பிட்டால் நல்லா கணக்கு போடலாம்!

வெண்டைக்காயை அதிகமாக சாப்பிட்டு வரும் பட்சத்தில், அதன் காம்பை போலவே நமது புத்திக்கூர்மையும் நீளும். எந்த காரியத் தையும் தெளிவாக அணுகும் ஆற்றல் நமக்கு ஏற்படும் என ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. வெண்டைக்காயில் உயர்தரமான பாஸ்பரசும், தாவரப் பசையும், நார்ப்பொருளும் உள்ளன. எளிதில் நமது உடலால் ஏற்றுக் கொள்ளப்படும் சிறந்த மாவுச்சத்துப் பொருட்களும் உள்ளன. இதில் உள்ள பெகடின் என்ற நார்ப்பொருள் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைக்கும் வேலையை கச்சிதமாக செய்கிறது.

இதயத்துடிப்பை சீராக்கும் மெக்னீசியம் என்ற வேதிப்பொருளும் உள்ளது. வெண்டையை சாப்பிடுவதன் மூலம் நமது உடலுக்கு 66 கலோரி கிடைக்கிறது. இதனாலேயே இந்தக்காய் மகத்துவம் நிறைந்ததாக திகழ்கிறது. வெண்டைக்காயை நறுக்கும் போது பிசு பிசுவென்று ஒரு திரவம் வெளிவருவதை உணர்ந்திருப்பீர்கள். அதை சிலர் அறியாமல் தண்ணீரில் கழுவி சமைப்பது உண்டு. இந்த பிசுபிசு திரவத்தோடு சமைத்து சாப்பிட்டால்தான் மூளைக்கு புத்துணர்ச்சியும், இதயத்திற்கும் இதத்தையும் தருகிறது.

நமது உடலில் சிறுநீரை நன்கு பிரிய வைத்து, உடலுக்கு நல்ல குளிர்ச்சியை தரும். தோலில் ஏற்படும் வறட்சித்தன்மையை நீக்கும் ஆற்றலும் இதற்கு உண்டு. படிக்கும் குழந்தைகளுக்கு நாள்தோறும் உணவில் வெண்டைக்காயை பொடியாக நறுக்கி, வதக்கி சாப்பிட வைத்தால் நினைவாற்றல் பெருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை நம்பலாமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது மேற்குலக நாடுகளால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கும், சிறீலங்கா அரசாங்கத்திற்கு சீனா வழங்கி வரும் ஆயுத உதவிகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் தேவையான முழு உதவிகளையும் புரிவதற்குத் தென்னாபிரிக்கா தயாராக இருப்பதாகப் படையாட்சி அவர்கள் அள்ளி வீசிய ஆசை வார்த்தையை வன்னிக்கு ஒப்புவித்த பொழுது அதனால் ஈர்க்கப்பட்டு தமது காலடியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை வீழ்ந்துவிடும் என்று பிரித்தானியத் தமிழர் பேரவையினரும், அதன் செயலாளர் நாயகமான ரூட் ரவி அவர்களும் கற்பிதம் செய்து கொண்டார்களோ தெரியவில்லை.

ஆனால் தென்னாசியாவின் முதன்மை வல்லரசாக விளங்கும் இந்தியாவிடம் ஆயுதப் பயிற்சிகளையும், ஆயுத - நிதி உதவிகளையும் பெற்றுப் பின்னர் அதனை எதிர்த்துப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் தென்னாபிரிக்காவின் ஆசை வார்த்தையில் மயங்கிவிழும் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கவில்லை. தவிர தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய தென்னாபிரிக்காவின் உண்மையான நிலைப்பாடு தொடர்பான புரிதலும் சமாதான காலப் பகுதியிலேயே தமிழீழ



விடுதலைப் புலிகளுக்கு இருந்தது.

தென்னாபிரிக்காவில் வெள்ளையின நிறவெறிக்கு எதிராக நீண்ட கால ஆயுதப் போராட்டத்தையும், சமநேரத்தில் அறவழிப் போராட்டத்தையும் முன்னெடுத்த விடுதலை இயக்கம் என்ற வகையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பற்றியும், நெல்சன் மண்டேலா உள்ளடங்கலான அதன் தலைவர்கள் - போராளிகள் தொடர்பாகவும் நீண்ட காலமாகவே நன்மதிப்பான எண்ணத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருந்தனர். தவிர சிங்களப் படைகளுக்கு எதிரான யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட பல பவள் ரக கவச வாகனங்கள் தென்னாபிரிக்காவின் வெள்ளையின நிறவெறி அரசாங்கத்தால் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென வழங்கப்பட்டவை.

இந்த வகையில் 1990ஆம் ஆண்டு சிறையிலிருந்து மண்டேலா அவர்கள் விடுவிக்கப்பட்ட பொழுதும், நிறவெறிப் பேதங்களின்றி முதன் முதலாக 1994ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் அவர் வெற்றியீட்டிய பொழுதும், விடுதலைக்காகப் போராடிய ஒரு இனமும், அவ்வினத்தின் உரிமைப் போராட்டத்திற்குத் தலைமையேற்றுப் போராடிய இயக்கமும் வெற்றியீட்டியமை தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகவே இருந்தது. ஆனால் மண்டேலாவின் பதவியேற்பு வைபவத்திற்கு அன்றைய சிங்கள அதிபர் டி.பி.விஜேதுங்கா அழைக்கப்பட்ட பொழுது அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதோடு, அதனையிட்டுத் தமது அதிருப்தியையும் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்தனர்.

மண்டேலாவின் பதவியேற்பு வைபவம் நடைபெற்ற சில நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் 1994 வைகாசி மாத இதழில் வெளியிடப்பட்ட கவிதையன்றில் இதுபற்றிப் புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டிருந்தார்:

**நெல்சன் மண்டேலா!**

**கறுப்புச் சிங்கமே! கையை நீட்டு.**

**குலுக்கிக் கொள்ளுவோம்.**

**உன்னைக் கட்டித்தழுவத் துடிக்கின்றோம்.**

**என்ன செய்வது நீ எட்ட இருக்கின்றாய்.**

**அன்று நீ 'சிம்மாசனம்' ஏறியபோது**

**எமக்கேன் அழைப்பனுப்பவில்லை?**

**சிறீலங்காவுக்கு நீ எந்தவழி உறவு?**

**விஜேதுங்காவை விருந்துக்கழைத்தபோது**

**தமிழீழம் உன் கண்களுக்கு ஏன் தட்டுப்படவில்லை?**

**இது விருந்து கிட்டவில்லையென்ற விசனமல்ல...**

**போராடும் பூமியன்றை**

**புறமொதுக்கிவிட்டாய் என்ற ஆதங்கம் மட்டுமே.**

**போகட்டும்? இதனால் கோபமேதுமில்லை.**

**இனிமேலாவது நண்பர்களை இனம் கண்டுகொள்.**

**நன்மை உனக்குத்தான்.**

தனது கவிதையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை அவர்கள் குறிப்பிட்டது போன்று விஜேதுங்காவை மண்டேலாவின் பதவியேற்பு வைபவத்திற்கு தென்னாபிரிக்க அரசாங்கம் அழைத்ததையிட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகள் அதிருப்தியடைந்திருந்தாலும், தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடிய ஒடுக்கப்பட்ட தேசம் என்ற வகையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தென்னாபிரிக்கா பக்கபலமாக நிற்கும் என்ற கருத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் விலகவில்லை.

இதன் காரணமாகவே தமிழீழத் தனியரசை நிறுவுவதற்குத் தென்னாபிரிக்காவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். தென்னாபிரிக்காவில் இயங்கி வந்த தமிழ்த் தேசிய அமைப்புக்கள் ஊடாகவும், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைமையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்த இந்திய வம்சாவழித் தென்னாபிரிக்கத் தமிழர்கள் வாயிலாகவும் இதற்கான முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டன.

2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்குலக நாடுகளிலிருந்து வன்னிக்கு வருகை தந்த தென்னாபிரிக்காவில் தொடர்பைக் கொண்டிருந்த தொழிலதிபர்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற துறைசார் நிபுணர்கள் ஊடாகவும் இதற்கான முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்தனர். தமிழீழத் தனியரசை நிறுவுவதற்குத் ஆபிரிக்க பிராந்தியத்தில் சக்தி வாய்ந்த நாடாக விளங்கும் தென்னாபிரிக்காவின் அங்கீகாரத்தைப் பெறுவதென்பது ஆபிரிக்க கண்டத்தின் பெரும்பாலான கறுப்பின நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒப்பானது என்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை நன்கு அறிந்திருந்தது. இதனாலேயே தமிழீழத் தனியரசுக்கு உலக அங்கீகாரம் பெறும் தமது வியூகத்திற்குள் தென்னாபிரிக்காவையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை கொண்டு வந்திருந்தது.

ஆனால் தென்னாபிரிக்கா தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்த்து, அவர்களின் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கும் சம்பவம் ஒன்றும் 2005ஆம் ஆண்டு நிகழ்ந்தேறியது. 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் நாளன்று தமிழீழ தாயகத்தின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட கடற்கோள் பேரழிவைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பன்னாட்டு உதவி கோரி ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருந்த அப்போதைய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரான பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவை தென்னாபிரிக்காவிற்கு வருமாறு அங்குள்ள தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனைத் தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்த விரும்பிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர், தமது தென்னாபிரிக்க பயணத்திற்கும், அங்கு தென்னாபிரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளைத் தாம் சந்திப்பதற்கும் அனுசரணை வழங்குமாறு 2005ஆம் ஆண்டு சனவரி மாதத்தின் முற்பகுதியில் நோர்வேயிடம் கோரியிருந்தனர்.

இதற்கு தம்மால் இயலுமான முயற்சிகளை எடுப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உறுதியளித்த நோர்வே அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. இதுபற்றி சிறீலங்கா அரசாங்கத்துடனும் கலந்தாலோசித்தது. 22.01.2005 அன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை கிளிநொச்சியில் சந்திப்பதற்கு முதல் நாளாகிய 21.01.2005 அன்று கொழும்பில் அப்போதைய சிங்கள அதிபராக விளங்கிய சந்திரிகா குமாரதுங்கவை அன்றைய நோர்வேஜிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன் அவர்கள் சந்தித்த பொழுது இதுபற்றி நோர்வே தரப்பினரால் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் அன்றைய நோர்வேஜிய பன்னாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சர் ஹில்டே பிறஜ்போர்ட், வெளியுறவுத்துறை துணை அமைச்சர் விதார் ஹெல்கிசன், சிறப்புத் தூதுவராக விளங்கிய எரிக் சொல்கைம் ஆகியோர் பங்கேற்றனர்.

இத்பொழுது தென்னாபிரிக்காவிற்கு பயணம் செய்வதற்கும், தென்னாபிரிக்க அரசாங்கத்தின் உயர்தரப்பினரை சந்திப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புவதாக நோர்வேஜிய தூதுக்குழுவினர் தெரிவித்த பொழுது இதற்குத் தனது கடுமையான ஆட்சேபனையை அச்சந்திப்பில் கலந்து கொண்ட அப்போதைய வெளியுறவுத்துறை அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமர் வெளியிட்டார். தென்னாபிரிக்க அரசாங்கத்தின் உயர் தரப்பினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழவினர் சந் திப்பதற்கு நோர்வே அனுசரணை வழங்குவது என்பது பிரிவினைக்கு அனைத்துலக அங்கீகாரம் வழங்குவதற்கு ஒப்பானது என்று நோர்வேஜிய தூதுக் குழுவினரிடம் கதிர்காமர் எகிறிப் பாய்ந்தார்.


அப்பொழுது அவ்விடத்தில் குறுக்கிட்டு கதிர்காமரை சமாதானப்படுத்திய சந்திரிகா அம்மையார், ஆயுதங்களைக் கீழே போட்டு, பேச்சுவார்த்தைகளின் ஊடாக சனநாயக நீரோட்டத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இணைந்து கொண்டமை போன்று, நீண்டகால நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவிற்கும், சனநாயக நீரோட்டத்தில் அவர்கள் இணைவதற்குமான முதற்படியாக தென்னாபிரிக்காவிற்கான புலிகளின் அரசியற்குழுவின் பயணம் அமையும் பட்சத்தில் அதற்கு நோர்வே அனுசரணை வழங்குவதற்குத் தான் குறுக்கே நிற்கப் போவதில்லை என்று கூறினார். இதற்குப் பதிலளித்த நோர்வேஜிய தரப்பினர், ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்குத் தாம் அனுசரணை வழங்குவதன் பிரதான நோக்கம் சனநாயகம், நல்லிணக்கம், பன்மைத்துவம் ஆகியவை பற்றிய புரிதலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தி, அதன் ஊடாக சிறீலங்காவின் இறைமையைப் பாதிக்காத வகையிலான அரசியல் தீர்வொன்றை ஏற்கும் நிலைக்கு அவர்களை இட்டுச்செல்வதே என்றார்.

இதனைத் தொடர்ந்து மறுநாள் கிளிநொச்சியில் தமிழீழத் தேசியத் தலைவருடன் நடைபெற்ற சந்திப்பின் பொழுது. ஐரோப்பிய நாடுகளுக்கும், தென்னாபிரிக்காவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர் பயணம் செய்வதற்கும், அங்கு உயர்மட்ட சந்திப்புக்களை அவர்கள் மேற்கொள்வதற்கும் நோர்வே அனுசரணை வழங்கும் என்ற உறுதிமொழி நோர்வேஜிய தரப்பினரால் வழங்கப்பட்டது. இதன்படி 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் நோர்வேயின் அனுசரணையுடன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணங்களையும், உயர்மட்டச் சந்திப்புக்களையும் மேற்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர், ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் தென்னாபிரிக்கத் தலைவர் டேர்பனை சென்றடைந்தனர்.

அங்கு தம்மை சந்திப்பதற்கு தென்னாபிரிக்காவின் மூத்த விடுதலைப் போராளிகளில் ஒருவரும், அன்றைய துணை அதிபருமான ஜேக்கொப் சூமா அவர்கள் (தற்போதைய அதிபர்) நேரம் ஒதுக்கியுள்ளார் என்ற செய்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினரின் காதுகளை எட்டிய பொழுது அது இன்ப அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாகவே இருந்தது.

ஆனால் 11.04.2005 அன்று சூமாவை பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினர் சந்தித்த பொழுது பேரதிர்ச்சியே காத்திருந்தது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தென்னாபிரிக்காவின் அங்கீகாரத்தைப் பெற முடியும் என்று நம்பி வன்னியிலிருந்து டேர்பன் வரை வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினரிடம் பெரும் குண்டொன்றை சூமா அவர்கள் தூக்கிப் போட்டார். இதனைப் புலிகள் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் கொல்லப்பட்ட 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரிக்கை!

(திருகோணமலை)
தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்ட 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணை நடாத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டு ஜுன் மாதம் 11ம் திகதி திருக்கோயில் காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடாத்துமர்று ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களை சரணடையுமாறு அப்போது பொலிஸ் மா அதிபராக பதவி வகித்தவர் உத்தரவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் இது பற்றிய தகவல்கள் மூடிமறைக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உத்தரவிற்கு அமைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மான், பொலிஸ் உத்தியோகத்தர்களை கொலை செய்ததாக, அப்போதைய புலிகளின் கிழக்கு கட்டளைத் தளபதியும், தற்போதைய பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

# இணைப்புக்குழுவில் இருந்து விமல் வீரவன்சவை நீக்க தீர்மானம்!

(கொழும்பு)
கொழும்பின் புறநகர் கடுவலை இணைப்புக்குழு தலைவர் பதவியில் இருந்து அமைச்சர் விமல் வீரவன்சவை விலக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடுவலை இணைப்புக்குழுவின் 16 ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர். அமைச்சர் விமல் வீரவன்ச, அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட்டு வருகிறார். எனவே அவரை குறித்த பதவியில் நீடிக்கச்செய்ய முடியாது என்ற அடிப்படையிலேயே அவரை நீக்குதவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

# எங்கள் கைதுக்கு இலங்கை மீனவர்களே காரணம் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)
எங்களது கைதுக்கு இலங்கை மீனவர்களே காரணம் என குற்றம் சாட்டியுள்ளனர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு பின்னர் நல்லெண்ண நடவடிக்கையால் விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ள தமிழக மீனவர்கள்.

கடந்த வாரம் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த 28 தமிழக மீனவர்களையும், படகு பழுதாகி கடலில் தத்தளித்த நான்கு தமிழக மீனவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது இலங்கை கடற்படை. பின்னர், கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் ராஜபக்ச அறிவித் திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று ராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 33 பேர். அங்கு மீனவர் சங்கத்தினர் அவர்களை வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் விடுதலையாகி வந்த மீனவர்களில் சிலர் கூறியதாவது நாங்கள் அனுராதபுரம் சிறையில் 2 நாட்கள் இருந்தோம். அதற்கு பிறகு விடுதலை செய்யப்படுவதாகக் கூறி மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி, மீனவர்களை மட்டும் விடுதலை செய்வதாகவும் 6 படகுகள், மீன்பிடி சாதனங்களை விடுவிப்பது தொடர்பான விசாரணை ஜுலை 4-ந்தேதி நடைபெறும் என்றும் தெரிவித்தார். எங்களை விடுவித்தது மகிழ்ச்சி என்றாலும், எங்களையும், குடும்பத்தையும் காப்பாற்றும் படகுகளை விடுவிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது.

இலங்கை கடற்படையினர் எங்களை ஒப்படைக்க அழைத்து வந்தபோது, இலங்கை மீனவர்கள் தான், இந்திய மீனவர்களை இலங்கை கடல் பகுதிக்குள் அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தி வருவதாகவும், அதனாலேயே இந்திய மீனவர்களை கைது செய்வதாகவும் எங்களிடம் கூறினர்.

இதன் மூலம் கடற்படையினரின் நடவடிக்கைகளுக்கு இலங்கை மீனவர்கள் தான் காரணம் என்பது தெளிவாகிறது. சிறையில் இருந்த போது இலங்கை மீனவ பிரதிநிதிகள் எங்களை சந்தித்தனர். அவர்கள் எங்களிடம் இலங்கை கடல் பகுதிக்குள் தடைசெய்யப்பட்ட இழு வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க வேண்டாம் என்றனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க கூடாது - சிறுபான்மை கட்சிகள்

(கொழும்பு)
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கக் கூடாது என சிறுபான்மை கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகத் தெரிவித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என மூன்று சிறுபான்மை கட்சிகள் தெரிவித்துள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன. சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதி செய்ய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்ச்சியாக அமுலில் இருக்க வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்கும் நோக்கில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஆதரவளிக்கப்பட மாட்டாது.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வு வழங்கக் கூடிய ஆற்றல் நிறைவேற்று ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது என அவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். இதேவேளை, தற்போது அமுலில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் தேர்தல் முறையில் மாற்றம் செய்யக் கூடாது என மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச வேறு இடங்கள் கிடையாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடமே பிரச்சினைகள் குறித்து அறிவிக்க முடியும். எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் சிறுபான்மை மக்களுக்கு மிகவும் முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ரத்து செய்வது குறித்து இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போதைக்கு இது குறித்து தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. முற்றுமுழுதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும், சில மாற்றங்கள் செய்யப்படுவதனை எதிர்க்கவில்லை என ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

# விமல் மற்றும் சம்பிக்கவுக்கு தவறுகளை சுட்டிக்காட்ட உரிமை உள்ளது - மேர்வின் சில்வா

(கொழும்பு)
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்க அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு தவறுகளை சுட்டிக்காட்டும் உரிமை இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் ஆளும் கூட்டணியை கட்டியெழுப்ப உதவியவர்கள். அவர்கள் படித்த முக்கியமான நபர்கள்.

ஏதேனும் ஒன்றை சுட்டிக்காட்டும் உரிமை அவர்களுக்கு உள்ளது. அவர்கள் சுட்டிக்காட்டுவதை ஆராய்ந்து பார்க்கும் உரிமை ஜனாதிபதிக்கு உள்ளது. இந்த அமைச்சர்கள் கோபத்தில் இவற்றை கூறவில்லை. ஆளும் கூட்டணியில் தண்ணீர் நிறைந்த பின்னர் சத்தமிடும் தவளைகள் போன்றவர்கள் இல்லை. மனிதத் தன்மை பற்றி பேசும் நபர்களே உள்ளனர்.

யாருடைய கருத்துக்களையும் கேட்டு அவற்றில் நன்மை தீமைகளை அறிந்து கொள்ள இயலுமை மக்களுக்கு உள்ளது. கௌதம புத்தரின் சாசன காலம் முடிந்து மைத்திரி புத்தரின் சாசன காலம் உருவாகும் வரை இந்த நாட்டை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணியே ஆட்சி செய்யும் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதை கண்டிக்கும் ஜே.வி.பி

(கொழும்பு)
இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய மீனவர்களை அரசாங்கம் விடுதலை செய்துள்ளமையை ஜே.வி.பி கண்டித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் தலைமையில் இந்த வாரம் நடைபெறவுள்ள அந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் போதிய கவலைகளை வெளிக்காட்டவில்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதமில்லாது இந்திய மீனவர்களை விடுதலை செய்யப்பட்டமைக்கு ஜே.வி.பியின் மத்திய குழு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புதிய அரசாங்கத்தை நோக்கிய ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

# மாவனல்லை பள்ளிவாசலை அகற்ற பொலிஸ் உதவியை நாடிய பொதுபல சேனா

(கொழும்பு)
மாவனல்லை ஹெம்மாத்தகம பிரதேசத்தில் உள்ள ஹேரேமினியா தாருல் ஹிக்மா பள்ளிவாசலை அங்கிருந்து உடனடியாக அகற்றுமாறு கோரி பொதுபல சேனா அமைப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

உரிய பதிவுகளை மேற்கொள்ளாது குறித்த பள்ளிவாசல் சட்டவிரோதமாக இயங்கி வருகின்றது என்ற அடிப்படை யில் அந்த அமைப்பு இந்த முறைப்பாட் டை செய்துள்ளது. பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் தலைமை பிக்குவான மெதிரிகிரியே புஞ்ஞசார தேரர், பொதுபல சேனா அமைப்பின் சார்பில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார். இந்த முறைப்பாட்டை அடுத்து பள்ளி வாசலுக்கு சென்ற பொலிஸாருக்கு, பள்ளிவாசல் நிர்வாகம் அதன் பதிவு ஆவணங்களை காட்டியுள்ளனர். முஸ்லிம் மத மற்றும் கலாசார திணைக்களம் இதனை பள்ளிவாசலாக அங்கீகரித்துள்ளது. குறித்த பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றுமாறு கோரி பொதுபல சேனா சிறிய மற்றும் பாரியளவிலான ஆர்ப்பாட்டங்களை பிரதேசத்தில் மேற்கொண்டது. எனினும் பள்ளிவாசலை அகற்ற எந்த காரணங்களும் இல்லை என பள்ளி வாசல் நிர்வாகம் தெளிவாக கூறி யுள்ளது.

# பேரறிவாளனுக்கு திடீர் மருத்துவ பரிசோதனை

(கொழும்பு)
முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையில் உள்ள பேரறிவாளனுக்கு திடீரென மருத்துவ பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்தது. 20 ஆண்டுகளுக்கு மேலாக வேலூர் மத்திய சிறையில் உள்ள பேரறிவாளனுக்கு திடீரென சிறைத்துறை அதிகாரிகள் மருத்துவமனை பரிசோதனை மேற் கொண்டுள்ளனர். வேலூர் அடுக்கும் பாறை அரசு மருத்துவமனையில் இந்த பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.
பேரறிவாளனின் கோரிக்கையை ஏற்று இந்த பரிசோதனையை சிறை அதிகாரிகள் மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு ஒருவர் பலி-மூவர் காயம்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)
அமெரிக்காவில் உள்ள சியாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது உள்ளே நுழைந்த இரு நபர்கள் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இச்சம்பவத்தில் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நான்கு பேரில் இரு ஆண்களும், இரு பெண்களும் அடங்குவர். அவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி ஒரு ஆண் உயிரிழந்தார். எஞ்சியுள்ள மூவரை காப்பாற்ற மருத்துவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். எதற்காக இந்த துப்பாக்கி சூடு நடந்தது என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

## நைஜீரியாவில் போகோஹாரம் தீவிரவாதிகள் வன்முறை நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி



(நைஜீரியா)
வட கிழக்கு நைஜீரியாவில் போகோஹாரம் தீவிரவாதிகள் நடத்திய தீவிரவாத தாக்குதலில் நான்கு கிராமங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் பலியானதாக கூறப்படுகிறது.

அந்நாட்டு தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடு காரணமாக எவ்வளவு பேர் பலியானார்கள் என்பது தெரியவில்லை. கோ', அட்டகரா, அகபல்வா மற்றும் அகஞ்சாரா ஆகிய கிராம்ங்களை சேர்ந்த 300 பேர் வரை பலியாகியிருப்பார்கள் என அஞ்சப்படுகிறது. அப்பகுதி தீவிரவாதிகளின் முழு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் பலி எண்ணிக்கை எவ்வளவு என கண்டுபிடிக்க இயலவில்லை.

அப்பகுதி முழுவதும் சடலங்கள் மிகுந்து கிடக்கின்றன. மக்கள் பலரும் தங்கள் இருப்பிடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர் என்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான பீட்டர் பியே தெரிவீத்தார். தீவிரவாதிகளின் தொடர் தாக்குதலால் வடகிழக்கு பகுதியில் மட்டும் நாளொன்றுக்கு 800 பேர் தங்கள் குடும்பங்களையும், மக்களையும் விட்டு வெளியேறி வருகின்றனர். கடந்த வருடம் மட்டும் இங்கு தீவிரவாதிகளின் தாக்குதலில் 3000 பேர் பலியானதாக கூறப்படுகிறது.

## தாய்லாந்தில் ராணுவ ஆட்சியை எதிர்த்த முக்கிய தலைவர்கள் கைது



(பாங்காக்)
தாய்லாந்து நாட்டின் ஆட்சியை ராணுவம் கைப்பற்றியதாக அந்நாட்டு ராணுவ தளபதி பிரயுத் சான் ஓ சா, கடந்த மே 22ந் தேதியன்று தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பின் போது அறிவித்தார். அங்கு கடந்த சில மாதங்களாகவே அரசியல் சூழ்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாததால் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

அரசியல் சூழல் மேலும் மோசமாவதை தடுக்கவே ராணுவம் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் ராணுவம் கூறியது. அந்நாட்டின் முன்னாள் அதிபரான யிங்லக் சினவத்ரா ஆகியோர் ஏற்கனவே ராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஆனாலும் ராணுவ ஆட்சியை எதிர்த்து பல்வேறு கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்ப்பாளர்களின் தலைவரான சொம்பத் பூங்கம் கைது செய்யப்பட்டதாக அவரது பேஸ்புக் தகவல் கூறியுள்ளது. ஆட்சியை கைப்பற்றிய பின் ராணுவத்தினரை வந்து சந்திக்குமாறு பூங்கம் அறிவுறுத்தப்பட்டார். ஆனால் அவர் அதற்கு உடன்பட மறுத்து தலைமறைவானார். தப்பிச் சென்ற அவரை ராணுவத்தினர் தேடி வந்தனர். இந்நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுடன் செக்ஸ் உறவு உடற்பயிற்சி ஆசிரியை 2-வது முறையாக கைது

(நியூயார்க்)
அமெரிக்காவில் உள்ள லாங் ஐலெண்ட் பகுதியை சேர்ந்தவர் ஜோய் மோரிஸ் (வயது 39) இவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளனர். இதே பள்ளியில் ஜோய் மோரிஸின் கணவர் ஹனி மோர்ஸி அறிவியில் ஆசிரியராக உள்ளார். இவர் நியுயார்க்கில் உள்ள குரோவர் லிளிவ் லேண்ட் குயின்ஸ் உயர் நிலைப்பள்ளி யில் உடற்பயிற்சி கூட ஆசிரியையாக உள்ளார். இவர் 2வது முறையாக கைது செய்யபட்டு உள்ளார்.



இவர் மீது 16 வயது மாணவனுடன் செக்ஸ் உறவு வைத்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. எடை குறைக்க வந்த ஒரு மாணவருடன் தகாத உறவு வைத்து இருந்ததாக ஏற்கனவே இவர் கடந்த சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டு 25 ஆயிரம் அமெரிக்க டாலர் ஜாமினில் வெளியே இருந்தார். தற்போது 16 வயது மாணவன் ஒருவனுடன் செக்ஸ் உறவு வைத்து கொண்டதாக மீண்டும் கைது செய்யப்பட்டு 25 ஆயிரம் அமெரிக்க டாலர் ஜாமினில் விடுதலை செய்யபட்டு உள்ளார்.

உடற்பயிற்சி கூடத்திற்கு வரும் மாணவர்களுடன் நெருக்கமாக பழகுவதும் அவர்களுக்கு செக்ஸ் தகவல்களை மொபைலில் அனுப்புவதும் இவரது வழக்கமாக இருந்ததாக கூறப்படுகிறது.

## பாகிஸ்தானில் கௌரவக் கொலையிலிருந்து தப்பிய இளம்பெண்



(இஸ்லாமாபாத்)
காதலித்தவரை கரம் பிடித்த ஒரு இளம் பெண்ணை பாகிஸ்தானியர்கள் கடந்த வாரம் காட்டுமிராண்டித்தனமாக கொன்ற சம்பவம் உலகம் முழுவதும் உள்ள மனித நேய ஆர்வலர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த அதிர்வின் அலை ஓய்வதற்குள், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம், ஹபீஸாபாத் பகுதியை சேர்ந்த 18 வயது பெண்ணை அவரது குடும்பத்தாரே துப்பாக்கியால் சுட்டு, கால்வாயில் தூக்கி வீசிய கோரம் நிகழ்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக முஹம்மது குவைசர் என்பவரை உயிருக்கு உயிராக காதலித்து வந்த சபா மக்சூத் என்ற பெண், தனது குடும்பத்தாரின் சம்மதத்தை பெறாமல் சமீபத்தில் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதியர் வசித்து வந்த பகுதிக்கு சென்ற சபாவின் தந்தை, சகோதரர், மாமா, அத்தை ஆகியோர் அவரை குண்டு கட்டாக கட்டி ஹபீஸாபாத்துக்கு தூக்கி வந்தனர். கண்மூடித்தனமாக அவரை துப்பாக்கியால் சுட்ட அவர்கள், ஒரு சாக்குப் பையில் உடலை திணித்துக் கட்டி, வீட்டோரம் பாயும் பெரிய கால்வாயில் வீசினர்.

சாக்குப் பைக்குள் கிடந்த சபா, தெய்வாதீனமாக மயக்கம் தெளிந்து, கட்டை அவிழ்த்துக் கொண்டு, தட்டுத் தடுமாறி கால்வாயில் இருந்து கரைக்கு வந்து சேர்ந்தார். அவ்வழியாக சென்ற சிலரின் உதவியுடன் அருகில் உள்ள பெட்ரோல் பங்குக்கு வந்து சேர்ந்த அவர், அங்கிருந்தவர்களிடம் நடந்த சம்பவத்தை கூறி உதவி கோரினார். அவர்கள் அளித்த தகவலையடுத்து, விரைந்து வந்த போலீசார், ஆம்புலன்ஸ் மூலம் சபாவை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தாடை மற்றும் இடது கையில் குண்டு பாய்ந்த நிலையில் தற்போது அவர் சிகிச்சை பெற்று வரு கிறார். இச்சம்பவத்துக்கு காரணமான அனைவரும் தலைமறைவாகி விட்டதாகவும், அவர்களை தேடி வருவதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

சுமார் 18 கோடி மக்கள் வாழும் பாகிஸ்தானில் இருக்கும் பெண்கள், பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக திரு மணம் செய்து கொள்வது கொடுங்குற்றமாக கருதப்படுகிறது. தங்களது பேச்சை மீறி காதல் திருமணம் செய்து கொள்ளும் இளம் பெண்களை குடும்ப கவுரவம் என்ற பெயரில் அங்குள்ளவர்கள் கொன்று குவிப்பது வாடிக்கை யாகி விட்டது. கடந்த ஆண்டில் மட்டும், இதைப் போன்று 869 கவுரவக் கொலைகள் நடந்ததாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், வெளிச்சத்துக்கு வராத கவுரவக் கொலைகள் இதை விட பன்மடங்கு அதிகமாக இருக்கலாம் என மனித உரிமை ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

## செயற்கையால் உயிர் வாழும் உலகின் முதல் குழந்தை



(பிரித்தானியா)
பிரித்தானியாவில் பிறந்து 13 நாட்களே ஆன குழந்தை, செயற்கை இதயம் பொருத்தப்பட்டு சுவாசித்து வருகின்றது. டியார்னா மிட்டில்டன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இக்குழந்தை உலகின் செயற்கை முறையில் சுவாசிக்கும் இளைய குழந்தையாகும்.

5 பவுண்ட் எடையுடன் பிறந்த இந்த குழந்தைக்கு லைடன் கோரொனரி ஆர்ட்டரிஸ் மற்றும் வலது பக்க இதயம் இல்லாததால் செயற்கை இருதயம் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது உயிருக்கு போராடி வரும் இந்த குழந்தைக்கு விரைவில் இதயம் மாற்று சிகிச்சை செய்ய வேண்டும்.

குழந்தையின் பெற்றோர்களான சார்னெக்ரே (22), காரி மிட்டில்டன் (25), ஆகியோர் மக்களை உறுப்பு தானம் செய்யுமாறு கேட்டுள்ளனர். இதுவரை எந்த வித இதயமும் கிடைக்காததால் 33 பவுண்ட் எடையுள்ள இயந்திரத்தின் உதவியுடன் சுவாசித்து வருகின்றது.

## கவலைக்கிடமான நிலையில் நடிகை மனோரமா



(இந்தியா)
நடிகை மனோரமாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான படங்களில் நகைச்சுவை மற்றும் குணசித்திர வேடத்தில் நடித்துள்ள நடிகை மனோரமாவிற்கு கடந்த இருதினங்களுக்கு முன்பு மூச்சு திணறல் ஏற்பட்டது.

இதனையடுத்து உடனடியாக அவரை தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில், மனோரமாவின் உடல் நிலை தொடர்ந்து மோசமான நிலையிலேயே இருப்பதாகவும், அடுத்த 28 மணி நேரத்துக்கு அவர் தீவிர சிகிச்சை பிரிவிலேயே வைக்கப்பட்டு இருப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபையினருக்கு நியதிச்சட்டங்கள் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்களுக்கான நியதிச்சட்டங்கள் தொடர்பான செயலமர்வு நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்தில் அமைந்துள்ள மாகாணசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

மாகாணசபை பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அரசியலமைப்பு கற்கைகளுக்கான நிறுவனத்தினரால் நியதிச் சட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. இதில் மேற்படி நிறுவனத்தின் சட்டத்தரணிகள் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர். குறிப்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரட்ண தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவினர் நியதிச் சட்டங்கள் தொடர்பிலான கருத்துரைகளை வழங்கினர். இச் செயலமர்வு இன்றய தினமும் நடைபெறவுள்ளது.

## போதைப்பொருள் பயன்பாடு அதிகரிப்பு சபையில் சிறிதரன் பா.உ.

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். போதைப் பொருட்கள் பாரியளவில் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. யாழ்ப் பாணத்திலும் போதைப் பொருட்களின் பயன்பாடு அதி கரித்துள்ளது. இதனால் இளைஞர் சமூகம் சீரழிகின்றது. போதைப் பொருள் மற்றும் மதுபான பயன்பாட்டை கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக் கவில்லை.

சுங்கத் திணைக்களம் இதுபற்றி எவ்வாறு பேசினாலும், நாட்டுக்குள் சட்டவிரோதமாக போதைப் பொருள் கொண்டு வரப்படுவதனை மறுப்பதற்கில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார். வெளி மாவட்டங்களிலிருந்து வடக்கிற்கு கொண்டு வரப்படும் கள்ளு வகைகள் சுகாதாரத்திற்கு உகந்தவையல்ல. இவை செயற்கையாகவே தயாரிக்கப்படுகின்றன.

## கதிர்காம பாதயாத்திரை குழுவினர் களுவாஞ்சிக்குடியில் மூவர் இடைநடுவில் திரும்பினர்!

யாழ்ப்பாணத்திலிருந்து மே 10ல் ஆரம்பித்த கதிர்காமத்திற்கான பாதயாத்திரைக் குழுவினர் 26 நாட்களின் பின்னர் இன்று 06ம் திகதி வெள்ளிக்கிழமை களுவாஞ்சிக்குடியை வந்தடையவுள்ளனர். வருடாந்தம் கதிர்காம பாதயாத்திரைக்கு தலைமை தாங்கி நடாத்திவரும் காரைதீவு ஸ்ரீநந்தவனப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா ச.மகேஸ்வரன் (வேல்சாமி) இம்முறை 15வது தடவையாக பாதயாத்திரை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாதயாத்திரைக் குழுத் தலைவர் வேல்சாமியிடம் இத்திகதி மாற்றம் பற்றி கேட்டபோது: கடந்த தடவையும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது. அப்போது பாதயாத்திரைக்குழு முல்லைத்தீவில் தரித்திருந்தவேளையில் இம்மாற்றச்செய்தி கிடைத் தது. ஆனால் இம்முறை ஆரம்பமாகமுதலே மாற்றச்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காம ஆடிவேல்விழா உற்சவம் ஜுலை மாதம் 29ஆம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது என பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பின்பு கதிர்காம தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே சசீந்திர ராஜபக்ஸ விடுத்துள்ள அறிவித்தலின் பிரகாரம் ஆடிவேல்விழா உற்சவம் ஜுன் மாதம் 28ஆம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுலை மாதம் 13ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது என கூறியிருந்தார்.

இது எமக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது இதனால் நாம் மே 29இல் ஆரம்பிக்க திட்டமிருந்த பாதயாத்திரையை முன்கூட்டியே நடாத்தவேண்டிய அவசரநிலைமைக்குத் தள்ளப்பட்டோம் அதன்படி பாதயாத்திரை கடந்த மே 10ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது.

26நாடகளின் பின்னர் இன்று முருகன் அருளால் களுவாஞ்சிக்குடியை அடைவோம். 08ம் திகதி கல்முனையையும் 10ம் திகதி காரைதீவையும் அங்கிருந்து 12ம் திகதி புறப்பட்டு 13ம் திகதி திருக்கோவிலையும் 16ம் திகதி பாணமையையும் 18ம் திகதி உகந்தையையும் அடைவோம் என எதிர்பார்க்கின்றோம்.

அநேகமாக காட்டுப்பாதை 21 அல்லது 22 ல் திறக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியெனின் காட்டுக்குள் முதன்முதலாக பிரவேசித்து கதிர்காம கொடியேற்ற தினமான 28ம் திகதி அங்கு நிற்கலாமென முருகன் அருளால் எதிர்பார்க்கின்றோம். என்றார்.

மேலும் கடந்து வந்த பயணம் பற்றிக்கேட்டபோது தற்போது எமது குழுவில் 52 அடியார்கள் வருகின்றனர். இடைநடுவில் மூன்று அடியார்கள் திரும்பி விட்டனர். கிளிவெட்டியில் வைத்து நாய் கடித்த கொழும்பைச் சேர்ந்த அடியார் மற்றும் சுகயீனம் காரணமாக இரு அடியார்களும் வீடு திரும்பினர்.

பயணம் சுகமாகவிருந்தது. போகுமிடமெல்லாம் முருகனருளால் நல்ல வரவேற்பு. என்றார். கதிர்காமத்திற்கான பாதயாத்திரையை வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து பல குழுக்கள் வருடாந்தம் மேற்கொண்டு வருகின்ற போதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கூடிய காலத்தில் சமய ஆசாரப்படி முறைப்படி பாதயாத்திரையை பக்திமுக்தியுடன் மேற்கொண்டு வருவது வேல்சாமி தலைமையிலான குழவினர் என்றால் அனைவரும் அறிவர்.

1999 களில் அமெரிக்க முருகபக்தர் பற்றிக் ஹரிகனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாதயாத்திரை இம்முறை 15வது தடவையாக நடைபெறவுள்ளது. 1999 லிருந்து தொடர்ந்து 09வருடங்கள் தலைமை தாங்கி நடாத்தி வந்த பற்றிக் ஹரிகன் 2007 இல் தமது தலைமைப்பொறுப்பை காரைதீவைச்சேர்ந்த வேல்சாமியிடம் ஒப்படைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை வேல்சாமி தலைமையில் இவ்யாத்திரை ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யுத்தம் முடிந்து சமாதானம் தோற்றுவிக்கப்பட்ட பிற்பாடு யாழ்ப்பாணத்திலிருந்து 3வது தடவையாக இம்முறை இப்பாதயாத்திரை மேற்கொள்ளப்பட முருகன் அருள் பாலித்துள்ளான் என ஏற்பாட்டாளர் வேல்சாமி தெரிவித்தார்.

## மாவட்ட பதில் சட்டவைத்திய அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு



(யாழ்ப்பாணம்)
யாழ்.குருநகர் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த யுவதி கொன்சலிட்டா வழக்கில் மாவட்ட பதில் சட்டவைத்திய அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குறித்த யுவதியின் உயிரிழப்பு தொடர்பில் சந்தேகங்கள் இருப்பதாக கூறி உறவினர்கள் தாக்கல் செய்த வழக்கின் விசாரணைகள் இன்றையதினம் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது யுவதி இறப்பதற்கு முன்னரான, மூன்று மாதங்களின் தொலைபேசி விபரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.
இதேவேளை குடும்பத்தினர் ஊடகவியலாளர்களை சந்திக்க வேண்டாம் என கடந்த முறை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சட்டத்தரணிகள் சிலரினால் அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும், குறித்த யுவதியின் தாய் தனது மகளுக்கு பாதிரியார் தொலைபேசி மூலம் அனுப்பிய புகைப்படங்களை ஊடகவியலாளர்களுக்கு காண்பித்தார்.

மேலும் தன் மகள் மரணத்திற்கு நீதி வேண்டும் என கோரியதுடன், தன் மகள் தொடர்பில் சட்டத்தரணிகளும். சில பாதிரியார்களும் கதை புனைந்து வருவதாக கூறியதுடன், தாம் ஏழைகள் என்பதற்காகவே இவ்வாறு நடத்தப்படுகின்றோம் எனவும் கூறியுள்ளார்.

## யாழ்.நகர்ப் பகுதியில் புகைமண்டலம் நடவடிக்கை எடுக்குமா வடமாகாணசபை



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபையின் கவனயீனத்தால் மிகமோசமாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்.நகரச் சுற்றாடல் தொடர்பில் வடக்கு மாகாணசபையில் சுட்டிக் காட்டப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதனால் யாழ்.நகரப் பகுதி மற்றும் காக்கைதீவு பகுதிகளில் வாழும் மக்கள் மிகப்பெரும் அசௌகரியங்களை தினசரி எதிர் கொள்கின்றார்கள். நகரக் கழிவுகள் மற்றும் பொதுமக்களால் கொண்டு சேர்கக்கப்படும் கழிவுகள் நகரத்தை அண்டியிருக்கும் காக்கை தீவு பகுதியில் தினசரி பெருமளவில் கொட்டப்படுகின்றது.

இவை மாலை நேரங்களில் தீயிடப்படுவதனால் நகரத்தையும், அராலி, வட்டுக்கோட்டை பகுதிகளை இணைக்கும் கல்லுண்டாய் வீதியில் பெரும் புகைமூட்டங்கள் உண்டாகி பயணிகளை பாதிப்பதுடன் அருகிலுள்ள நவாலி மற்றும் ஓட்டுமடம் உள்ளிட்ட பகுதிகளையும் நகரப் பகுதியையும் அது பாதிப்பதுடன் பெரும் சுற்றுச் சூழல் பிரச்சினையும் உருவாகி யிருக்கின்றது.

குறித்த பகுதியில் முறையற்ற விதத்தில் யாழ்.மாநகரசபை மற்றும் பொதுமக்களால் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பாக வடமாகாண சபையில் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோருக்கு சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலும் நடவடிக்கைகள் எவையும் ஆக்கபூர்வமான வகையில் எடுக்கப்படாத நிலையில் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மேலும் நகரக் கழிவுகளை முகாமை செய்வதற்காக திண்மக்கழிவு முகாமை செய்யும் திட்டம் கொண்டுவரப்பட்டபோதும் மாநகர சபையில் அசமந்தப் போக்கினால் அது கிடப்பில் இருக்கின்றது.

மேலும் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதனால் அவை கடல் நீரேரியில் பெருமளவில் கலந்து அராலி, நாவாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் வாழும் சிறிய கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்.

இதேபோன்று யாழ்.குடாநாட்டின் மீன் வளம் உற்பத்தியாகும் இந்த கடல்நீரேரியில் இவ்வாறு கழிவுகள் கலப்பதனால் மீன் வளமும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் நகரப்பகுதியில் இரவில் சுற்றித்திரிந்த காவாலிகள் பொலிசாரால் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாகக் கூறப்படும் 9 பேர் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டதாக யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸார் இன்று வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.
பொலிசார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போது, சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாகக் கூறப்படும் 25 இற்கும் மேற்பட்டவர்கள் பிடிக்கப்பட்டு அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, உரிய அடையாளங்களை நிரூபிக்கத் தவறியவர்களும் இரவில் நட மாடியமைக்கான நியாயமான காரணத் தை தெரிவிக்காதவர்களுமாக 9 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மிகுதிப் பேர் விடுவிக்கப்பட்டதாகவும் கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்

ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இக்காணிகளின் பெறுமதி இன்னும் மதிப்பீடு செய்யப்படவில்லை.

இதில் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் 29.90 ஏக்கர் காணி 3 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 17 மில்லியனாகும் என்றும் காணி அபிவிருத்தி அமைச்சு சபையில் பதிலளித்துள்ளது

### இலங்கை அரசாங்க

தொடர்ந்து வெளிநாடுகளில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டிருந்த அவர், இலங்கையில் தேர்தல் நெருங்குகின்ற சூழ்நிலையில், இந்த மாதம் முதல் இலங்கையிலேயே தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரும், அமைச்சர்கள் சிலரும் இணைந்து, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்களை தொகுதி ரீதியாக சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான செயற்பாடாகவே அமையும் என்று குறித்த அமைச்சர் அந்த ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

### படையினர்

நிலையில், காணி உரிமையாளர்கள் இனங்காணப்படவில்லை எனத் தெரிவித்து சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளமைக்கு எதிராக பொதுமக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியுமென தெரிவிததார்.

பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும். காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் எமக்குச் செய்யப்பட்டிருந்தன. அவற்றுக்கான தீர்வுகளும் ஆணைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆந்த வகையில் காணி உரிமையாளர்கள் இனங்காணப்படவில்லை என்று தெரிவித்து சுவீகரிப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டு இருந்தால் அதற்கு எதிராக குறித்த காணிகளின் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்ய முடியும் என்று அவர் மேலும் விளக்கமளித்தார்.

### புலிகளுக்கும்

தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினருக்கு எதிராக ஒரு முறைப்பாடு செய்யப்படவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரனகம தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றைய தினம் 59 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கல்முனையிலிருந்து காத்தான்குடிக்கு வர்த்தக நோக்கத்திற்காக சென்ற பலரைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது,

எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் மட்டக்களப்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் அடுத்த அமர்வுகள் முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

ஆணைக்குழுவிற்கு இதுவரையில் 18000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

### மக்களின் அடிப்படை

உரிமையை அவர் மீறி இருப்பதாக குறித்த ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் தேர்தல்களின் வெற்றிக்காக ஊடகங்களை பெரிதும் பயன்படுத்திக் கொண்ட அவர், தற்போது அவற்றை புறக்கணித்து வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டின்

தேவையற்ற விமர்சனங்களும், ஆர்ப்பாட்டங்களும் எழும்.

இதனைக் கருத்தில் கொண்டே
அவர் இலங்கைக்கான விஜயம் குறித்த திட்டங்களை பிற்போட்டுள்ளதாக குறித்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

### ஐ.நா மனிதஉரிமை

என்று சிறீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் வெளிநாடுகளில் இருந்தபடியே தமது
ஆதாரங்களை திரட்டும் என்று எதிர்பாக்கப்படுகின்றது.

### அரை மணி

நேரத்தில் முடிவுகளை அறிவித்து விட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இந்த இயந்திரத்தை பயன்படுத்தாது தேர்தல் ஆணையாளர் பெரும் தொகை பணத்தை விரயமாக்கி வருகிறார் என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இதற்கு பதிலளித்துள்ள தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, அப்படியான இயந்திரம் ஒன்று இருப்பதை தான் அறிந்திருக்கவில்லை என கூறியுள்ளார்.

அத்துடன் நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்தின்படி அப்படியான இயந்திரங்களை பயன்படுத்த முடியாது.

நடைமுறையில் உள்ள வாக்கு எண்ணும் முறையில் மாற்றங்களை செய்ய வேண்டுமாயின் அதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## மோடிக்கு அடிபணியாது 13 ஐ உடனே இரத்துச்செய்க! அரசை வலியுறுத்துகிறார் குணதாஸ

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறித்து அலட்டிக்கொள்ளாது 13 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக இரத்துசெய்ய வேண்டும் என்று கடும்போக்குடைய சிங்கள அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு, மாகாண சபை முறைமையையும் நாட்டிலிருந்து முழுமையாக அழித்துவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் மாகாண சபை முறைமை இருக்கவில்லை. அதற்குப் பின்னர் அதாவது, யுத்தம் உக்கிரமடைய ஆரம்பித்தவுடனேயே இந்த மாகாண சபை முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது.


ஆனால், தற்போது நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அனைவரும் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில், நாட்டில் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாத இந்த பயனற்ற மாகாணசபை முறைமை எதற்கு?

அத்தோடு, தற்போது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வரும் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் உடனடியாக இரத்துசெய்வதாக அரசு அறிவிக்க வேண்டும்.

பலனற்ற இந்த திருத்தத்தினால் நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றதே ஒழிய மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்ந்ததாகத் தெரியவில்லை. அதனால், இனப்பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட வேண்டுமெனில் உடனடியாக மாகாண சபை முறைமை யையும், 13 ஆவது திருத்தத்தையும் முற்றாக ஒழித்து புதியதொரு திருத்தத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்.

ஆனால், 13 ஆவது திருத்தத்தை நாட்டில் நிச்சயமாக அமுல்படுத்த வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளமை குறித்து அவரிடம் வினவிய போது,

மோடி சொல்வதையெல்லாம் இலங்கையில் நடைமுறைப் படுத்துவதென்பது இயலாத காரியமாகும். ஆகவே, அவர் குறித்து அலட்டிக்கொள்ளாது 13 ஆவது திருத்தத்தை நாட்டிலிருந்தே முழுமையாக அகற்ற வேண்டும் என நாம் அரசிடம் கேட்டுக் கொள்கிறோம் என்றார்.



## அவதூறு செய்யும் நோக்கில் செயற்படும் இணைய தளங்கள் தடை செய்யப்படும் - அரசாங்கம்

அவதூறு செய்யும் நோக்கில் செயற்பட்டு வரும் இணைய தளங்கள் தடை செய்யப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனிப்பட்ட நோக்கங்களுக்காக நபர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி அவதூறு செய்யும் இணைய தளங்களை தடை செய்ய வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இணைய தளங்களை தடை செய்யுமா என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாகரீகமான சமூகத்திற்கு இடையூறாக அமைந்துள்ள இணைய தளங்களை தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி உறுப்பினர்களது நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையிலும் சில வேளைகளில் இணைய தளங்களில் தகவல் வெளியிடப்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இணைய தளங்கள் முடக்கப்படுவதற்கு ஊடக அமைச்சரை குற்றம் சுமத்த முடியாது எனவும் ஆளும் கட்சியின் பலம்பொருந்திய நபர்கள் இணைய தளத் தடையின் பின்னணியில் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

### காணாமல் போனோர் ஆணைக்குழுவிடம் 18600 முறைப்பாடுகள்

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரின் போது காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 18,600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
இதனை குறித்த ஆணைக்குழுவின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு, கடந்த ஜனவரியில் இருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மூன்று அமர்வுகளை நடத்தியுள்ளது.

நான்காவது அமர்வு இந்த வாரத்தில் மட்டக்களப்பில் நடத்தப்படவுள்ளது.

இந்தநிலையில் இதுவரை ஆணைக்குழுவுக்கு 18,600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதில் 5000 முறைப்பாடுகள் பாதுகாப்பு படையினர் தொடர்பானதாகும் என்று ஆணைக்குழுவின் உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கோப்பை கால்பந்து 2014
## ரொனால்டோ காயம்

(பிரேசில்) பிரேசிலில் வரும் 12ம் தேதி துவங்கும் உலக கோப் பை கால்பந்து போட்டியில் குருப் ஜி பிரிவில் இடம் பெற்றுள்ளது போர்ச்சுகல். இந்த அணி 16ம் தேதி தனது முதல் போட்டியில் ஜெர் மனியை எதிர்கொள்கிறது. ஒரு வாரம் கழித்து அமெரிக்காவையும், 26ம் தேதி கானாவையும் எதிர்த்து விளையாடுகிறது போர்ச்சுகல் அணி. அந்த அணியில் கடந்த ஆண்டின் சிறந்த கால்பந்து வீரர் விருதை வென்ற நம்பிக்கை நட்சத்திரமான ரொனால்டோ காயம் காரணமாக அவதிப் பட்டு வருகிறார் என்று வெளியாகியுள்ள தகவல் போர்ச்சுகல் ரசிகர் களை கவலையில் ஆழ்த்தி யுள்ளது.

ரொனால்டோ இடது தொடையின் பின்புறம் தசைப்பிடிப்பால் அவதிப் பட்டு வருவதாக போர்ச்சுகல் கால்பந்து கழகம் வெளியிட்டுள்ள - அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடன் உலக கோப்பை போட்டியில் விளையாட உள்ள நட்சத்திரங்களான ராவுல் மெய்ரேலெஸ், பெபே, பீடோ ஆகியோரும் காயத் தால் அவதிப்பட்டு வருகின்றனர். உலக கோப்பை போட்டி துவங்குவதற்கு முன்னர் அவர் முழுஉடல் தகுதி பெறுவாரா என்பதே சந்தேகத்துக்கு உரியதாக இருக் கிறது. உலக கோப்பையில் விளையா டுவதற்கு அணியை தயார் படுத்தும் வகையில் போர்ச்சுகல் அணி தற்போது அமெரிக்காவில் நியூஜெர்சி அணியில் பயிற்சி மேற் கொண்டு வருகிறது. உலககோப்பை துவங்கு வதற்கு முன்னர் முழு உடல் தகுதி பெறுவதற்காக, நால்வரும் நியூயார்க் ஜெட்ஸ் பயிற்சி மையத்தில் பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உலக கோப்பை போட்டிக்கு முன்னர் ரொனால்டோ விளையாட போதுமான தகுதியைப் பெறுவதுடன், அணிக்கு உத வுவார் என்று நம்புகிறோம். உலக கோப்பை போட்டி ஒரு விதமான சவால். இதனால், இதில் விளையாடும் நானும், சக வீரர்களும் முழு உடல் தகுதியுடனும், சிறப்பான விளையாட்டு திறனுடனும் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். நாங்கள் ஜெர்மனியை எதிர்த்து விளையாடும் முதல் போட்டி யை வெற்றிகரமாகத் துவக்க வேண்டியது முக்கியமானது. அடுத்து வரும் போட்டி களில் வெற்றி பெற இது அவசிய மானது. என்று போர்ச்சுகல் வீரர் நானி கூறியுள்ளார்.

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் இறுதிக்கு முன்னேறினார் ஷரபோவா



(பாரீஸ்) பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் மரியா ஷரபோவா. கடுமையாக போராடிய பவுச்சர்ட் நூலிழையில் வெற்றி வாய்ப்பை நழுவ விட்டார். பிரான்ஸ் தலைநகர் பாரீசில் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது. மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன.

இதில், 7ம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் ஷரபோவா, 18ம் இடத்தில் உள்ள இளம் வீராங்கனையான கனடாவின் பவுச்சர்ட் மோதின ர்.ஆரம்பத்தில் இருந்தே பவுச்சர்டின் கை ஓங்கியது. முதல் செட்டை 4-6 என்ற கணக்கில் கைப்பற்றினார். அடுத்த செட்டிலும் பவுச்சர்ட் முன்னிலை பெற்றார். 5 கேம்களை கைப்பற்றி வெற்றியை நெருங்கினார். ஆனால் தனது அனுபவ ஆட்டத்தால் ஷரபோவா அசத்தினார். 2வது செட்டில் பின்தங்கியிருந்த அவர், படிப்படியாக முன்னேறி 7-5 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். கடைசி செட்டில் ஷரபோவா அமர்க்களப்படுத்த துவங்கினார்.

அபாரமாக ஆடிய ஷரபோவா 6-2 என்ற கணக்கில் எளிதாக வெற்றி பெற்றார். சுமார் இரண்டரை மணி நேரம் நடந்த இப்போட்டியில் ஷரபோவா 4-6, 7-5, 2-6 என்ற செட்களில் பவுச்சர்ட்டை வென்று இறுதிக்கு தகுதி பெற்றார். கடந்தாண்டு பிரெஞ்ச் ஓபனில் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய ஷரபோவா, செரினா வில்லியம்சிடம் கோப்பையை தவற விட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டி நேற்று நடந்தது. இதில், ஜெர்மனி வீராங்கனை குரோனேபெல்ட், நெதர்லாந்து வீரர் ரோஜர் ஜோடி, ஜெர்மனி வீராங்கனை ஜுலியா ஜார்ஜஸ், செர்பியா வீரர் நெனாத் சிமோன்ஜிக் ஜோடியை எதிர்த்து விளையாடியது.

இதில் அன்னா ஜோடி முதல் சுற்றை 4-6 என கணக்கில் இழந்தது. தோற்றது. ஆனாலும், 2வது சுற்றில் அருமையாக விளையாடி, 6-2 என்ற கணக்கில் எளிதில் வென்றது.யாருக்கு பட்டம் என்பதை நிர்ணயிக்கும் 3வது சுற்றில் இரண்டு ஜோடிகளும் போட்டி போட்டு விளையாடியது. இதனால் 3வது சுற்று நீண்டு கொண்டு சென்றது. இறுதியில், அன்னா ஜோடி 10-7 என கைப்பற்றி, 4-6, 6-2, 10-7 என்ற செட்கணக்கில் ஜுலியா ஜோடியை வென்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

# உலககோப்பை ஹாக்கி போட்டி
## இந்தியா - ஸ்பெயின் இடையேயான ஆட்டம் டிரா

உலககோப்பை ஹாக்கி போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இந்தியா-ஸ்பெயின் அணிகள் மோதின. இந்த ஆட்டம் இரு அணிகளுக்கும் வெற்றி தோல்வி இன்றி டிராவில் முடிவடைந்தது. இந்தியா மற்றும் ஸ்பெயின் ஆகிய இரு அணிகளும் ஆட்டத்தின் முதல் பாதியில் தலா 1 கோல் அடித்திருந்தன. இதன் பின்னர் இரு அணிகளும் கடுமையாக போராடியும் கோல் ஏதும் அடிக்கப்படாததால் ஆட்டம் டிராவில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.


## சகல விதமான பதிப்பக வேலைகளுக்கும்

மன்னாரில் சகலவிதமான பதிப்பக வேலைகளும் ஒரேஇடத்தில் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

### நித்திலம் பதிப்பகத்திற்கு

- பனர் (Banner) தரம் 1–சதுர அடி – 70/=
- ஸ்ரிக்கர் (Sticker) தரம் 1–சதுரஅடி –120/=
- இறபர்ஸ்ராம் – 300/= இலிருந்து 10நிமிடத்தில் தர உத்தரவாதத்துடன்

முகவர்களிற்கும் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட சேவை பெறுனருக்கும் விசேடவிலைக்கழிவு வழங்கப்படும்

- விசிட்டிங்காட்
- பில் புத்தகங்கள்
- லேபல்கள்
- நினைவு மலர்கள்
- பருவகால மலர்கள்
- சஞ்சிகைகள்
- விசிட்டிங்காட்
- பில் புத்தகங்கள்
- லேபல்கள்
- நினைவு மலர்கள்
- பருவகால மலர்கள்
- சஞ்சிகைகள்
- போஸ்ரர்கள்
- பரிட்சை வினாத்தாள்கள்
- விளம்பரப் பலகைகள்
- கடிதத் தலைப்புக்கள்
- சான்றிதழ்கள்
- கலர் பிறிண்ட்
- நிழல் பிரதி –03/=
- 4கலர் வேலைகள்குறைந்த கட்டணத்தில்

*இவை அனைத்தும் மன்னாரிலே தயாரிக்கப்படுகின்றன ஏனையமாவட்டங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை அதிக கட்டணத்தை வழங்கி ஏமாறாதீர்கள் மன்னாரில் பல போலி முகவர்கள் உள்ளதால் குறைந்த கட்டணம் உள்ளஇடத்தை தெரிவு செய்யுங்கள் அரச ,அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் பாடசாலைகள்,தன்னார்வ சமூக சேவையாளர்கள்,ஆகியோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் தொலை பேசி இலக்கத்திற்கு நாடுங்கள் நித்திலம் பதிப்பகத்திற்கு*

**பிரதான வீதி , சின்னக்கடை , மன்னார்**
**0232223545 – 077-3355464**


# மன்னார் அணி தோற்றது நடுவராலா ? வீரர்களாலா ? எழுகிது சந்தேம்

வடக்கு மாகாண பாடசாலை களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வவுனியாவில் 5,6,7 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது நேற்று 6ம் திகதி நடைபெற்ற போட்டியில் 19 வயது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை யாழ் மாவட்ட நடுவர்கள் திட்டமிட்டு வெளியேற்றினர். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கும் யாழ் நெல்லியடி பாடசாலைக் குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ் மாவட்ட 2 நடுவர்களை நியமித்தனர். மன்னார் 1 கோலை போட்டு ஆட்டம் சூடு பிடித்த போது அதை தடுத்து நிறுத்த நடுவர்கள் திட்டமிட்டு மன்னாரின் முன்னணி வீரர்கள் இருவருக்கு சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினர். காரணம் கேட்டதற்கு கெட்ட வார்த்தை பேசியதாக ஒருபக்க நடுவரும் சண்டை பிடித்ததாக மற்ற பக்க நடுவரும் தெரிவித்தனர். மைதானத்தின் நடுவில் நடந்தது எப்படி பிரதான நடுவருக்கு தெரியாமல் பக்க நடுவர்களுக்கு கேட்டது.. பிரதம நடுவர் தாம் முடிவெடுக்காமல் பக்க நடுவர்கள் கூறியதை வலுக்கட்டாயமாக ஏன் ஏற்றார். சண்டை பிடித்திருந்தால் யாழ் மாவட்ட வீரருக்கு ஏன் சிவப்பு அட்டை காட்டவில்லை. பாடசாலை போட்டியில் மன்னார் புனித சவேரியார் கல்லூரி 1999ம் ஆண்டிலிருந்து 2013ம் ஆண்டு வரை தேசிய ரீதியில் 1ம் இடங்களை பெற்று பெருமை சேர்த்து வரும் கல்லூரி மாணவர்களை ஏன் பழி வாங்க வேண்டும். என ஆதங்கப்படுகிறார்கள் பின்னர் இது தொடர்பாக மேன் முறையிட்டும் அதை சமாளித்துவிட்டர்கள் எனவே விளையாட்டில் பிரதேசவாதம் பார்ப்பது ஏற்புடையதல்ல என விளையாட்டு வீரர்கள் மிகவும் வேதனைப்பட்டனர் சம்மந்தப்பட்டவர்கள் புத்தி சாதுர்யமாக நடந்து கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கால்பந்திலும் மேட்ச் பிக்சிங்

கடந்த ஆண்டில் ஐரோப்பாவில் நடந்த கால்பந்து போட்டிகளில் அதிக அளவில் மேட்ச் பிக்சிங் நடந்துள் ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது குறித்து சூதாட்ட நிறுவனங் களின் உயர் அமைப்பான பெடெர்பெட் பொதுச் செயலாளர் பெரான்கா கூறுகையில், ஐரோப்ப ாவில் 2013ஆ14ம் ஆண்டில் 110 போட்டிகளில் மேட்ச் பிக்சிங் நடந்துள்ளதாக கருதப்படுகிறது. மேலும் 350 ஆட்டங்கள் சந்தேகத்துக்குரியவை.

இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டு களை விட 20 சதவீதம் அதிகம். இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் [illegible] உள்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த போட்டிகளில் மேட்ச் பிக்சிங் நடந்துள்ளது.

உலகில் ஒவ்வொரு நாளும் மேட்ச் பிக்சிங் முயற்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த வைரஸ் மேலும் மேலும் பெருகிக் கொண்டே இருக்கிறது. உள்ளூர் போட்டிகளில் மேட்ச் பிக்சிங் செய்து அனுபவம் பெற்றுள்ளவர்கள் சர்வதேச போட்டி களிலும் பிக்சிங்கில் ஈடுபட முயல்வார்கள். இந்த பிரச்னையை எளிதாகத் தீர்க்க முடியும். ஆனால், இதனைத் தீர்க்க எவரும் முன்வருவதில்லை. எங்களது குரலை கால்பந்து கூட்டமைப்புகள் கேட்பதில்லை, என்றார்.

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 07.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.